www.padippakam.com

# தமிழ்த் தேசியத் தன்னுரிமைத் தீர்மானங்கள்

சென்னை – பெரியார் திடலில்

1990, பிப்ரவரி, 25 அன்று நடைபெற்ற

தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாட்டில்

( Conference on Self - Determination of

Tamil Nationality) நிறைவேற்றப்பட்டவை.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தேசியத் தன்னுரிமைத்
# தீர்மானங்கள்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

சென்னை – பெரியார் திடலில்
1990, பிப்ரவரி, 25
அன்று நடைபெற்ற
தமிழ்த் தேசியத் தன்னுரிமை
மாநாட்டில்
(Conference on Self-Determination
of Tamil Nationality)
நிறைவேற்றப்பட்டவை.

படிப்பகம்

www.padippakam.com

தமிழ்த் தேசியத்
தன்னுரிமைத் தீர்மானங்கள்

வெளியீடு :
தமிழ்த் தேசியத்
தன்னுரிமை ஒருங்கிணைப்புக்குழு.

அலுவலகம் :
25/5, இலால்கான் தெரு,
சிதம்பரம் – 608 001.

நன்கொடை ரூ. நான்கு.

இரண்டாம் பதிப்பு: [redacted] மார்ச் 1992

அச்சு
சபாநாயகம் பிரிண்டர்ஸ்
சிதம்பரம்.

படிப்பகம்

www.padippakam.com

## இரண்டாம் அச்சுக்கு முன்னுரை

கடந்த இரண்டு ஆண்டுகளில், தமிழகத்தில், புரட்சிகரமான புதிய சொல் ஒன்று வலம் வருகிறது. அச்சொல் 'தன்னுரிமை'! தமிழ்த் தேசிய இன உரிமையும் சமூக மாறுதலும் கோருவோர்க்குத் 'தன்னுரிமை' என்ற சொல் இருள் கிழிக்க வரும் கதிரவனின் முதல் ஒளிக்கீற்று போல் நம்பிக்கை ஊட்டுகிறது. அவர்கள் கண்களில் ஒளி ஏற்றுகிறது. ஆட்சியாளர்களுக்கோ, தன்னுரிமை என்ற சொல்- அது எவ்வளவு இளம் பருவத்தில் இருந்த போதிலும் அச்சம் ஊட்டு கிறது. அவர்கள் பதட்டமடைகிறார்கள். அச்சொல் ஒலிக்கும் திசைநோக்கிப் பாய்கிறார்கள்.

முதல் முதலாகத் தமிழ்த் தேசியத் தன்னுரிமை மாநாடு 1990 பிப்ரவரி 25 அன்று சென்னை பெரியார் திடலில் பெருந்திரளான மக்கள் பங்கேற்புடன் வெற்றிகரமாக நடந்தது. பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமை (Right of self Determination with the right to Secede) தமிழ்த் தேசத்திற்கு வேண்டும் என்று அம்மாநாடு தீர்மானம் நிறைவேற்றியது.

மாநாடு நடந்து முடிந்த பின்னர் பாரத தேசிய வெறியர் களும் அவர்களது பத்திரிகைகளும் மற்றும் தமிழ் இனத்துரோகி களும் மாநாட்டைத் தடை செய்யாதது தவறு என்று ஓலமிட்டனர்.

---



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவில் பல தேசிய இனங்களின் சமூக வளர்ச்சிக்கும் சமூக மாறுதலுக்கும் முதல் தேவை தேசிய இனத் தன்னுரிமையே என்ற கருத்து நாளுக்கு நாள வளர்ந்து வருகிறது; வலுப்பட்டு வருகிறது.

இந்தியாவில் மட்டுமல்ல, உலக அரங்கிலும், தேசிய இனத் தன்னுரிமை அடிப்படையில் விடுதலைப் போராட்டங்கள் பல நடக்கின்றன. இவ்வகைப் போராட்டங்களே இன்று முதன்மைப் பாத்திரம் வகிக்கின்றன. இலங்கையில் ஈழத்தமிழர்கள், பாகிஸ் தானில் பக்தூண்கள் மற்றும் சிந்திகள், சீனத்தில் திபெத்தியர்கள், மத்திய ஆசியாவில் பாலஸ்தீனியர்கள் மற்றும் குர்தீஸ் இன மக்கள், இங்கிலாந்தில் ஐரிஷ் இனமக்கள், யூகோஸ்லாவியாவில் குரோஷியர்கள். எத்தியோப்பியாவில் எரித்திரீயமக்கள், கனடா வில் கியூபெக் (பிரெஞ்சு) மக்கள் என்று பல்வேறு கண்டங்களில் தன்னுரிமையை அடிப்படையாகக் கொண்ட விடுதலைப் போராட்டங்கள் நடக்கின்றன. தன்னுரிமை அடிப்படையில், முதல் சோஷலிச நாடான சோவியத் ஒன்றியமே தனித் தனி நாடுகளாகி விட்டது.

இவ்வாறாக, தமிழ்த் தேசத் தன்னுரிமை கோரும் இத் தீர்மானங்களின் பொருத்தப்பாடு மேலும் மேலும் நிருபணமாகி வருகிறது. நிலைமை இவ்வாறிருக்க, தமிழ்த் தேசத் தன்னுரிமை கோருவோரை, தமிழ் இன வெறியர்கள் என்றோ பிராந்திய வெறியர்கள் என்றோ அல்லது பிரிவினைவாதிகள் என்றோ சாடுவோர் ஒன்று இந்திய ஆளும் சக்திகளாக இருக்கவேண்டும் அல்லது அவர்களது ஆதரவாளர்களாக இருக்கவேண்டும். அதாவது, அனைத்திந்தியப் பெருமுதலாளிகள், பார்ப்பனீய சக்திகள், இந்தி தேசிய இன ஆதிக்க சக்திகள் ஆகியோராக இருக்கவேண்டும் அல்லது அவர்களுக்கு ஏதோ ஒருவகையில் வால் பிடிப்போராக இருக்கவேண்டும். சாரத்தில், அவர்கள் இல்லாத இந்திய தேசியத்தை இட்டுக் கட்டிக் கொண்ட பாரத தேசிய வெறியர்கள்; தமிழ் இனவிரோதிகள்.

தமிழ்த் தேசியத் தன்னுரிமைத் தீர்மானங்களின் இரண்டா வது அச்சு இப்போது வெளிவருகிறது. கருத்து வளர்ச்சி அல்லது புரிதலில் ஏற்பட்ட வளர்ச்சி என்ற வகையில் ஒரு முக்கியத்



படிப்பகம்

www.padippakam.com

திருத்தம் தேவைப்படுகிறது. ஒரு வரலாற்று ஆவணம் என்பதால் இந்நூலின் உள்ளே திருத்தம் செய்யாமல் அதுபற்றி இம் முன்னுரையில் விளக்கப்படுகிறது.

இந்நூல் பக்கம் 23-ல் "கட்டமைப்பு ஒடுக்கு முறை" (Structural Oppression) என்ற கருதுகோள் வருகிறது. அது கூறுவதாவது: இந்தியாவில் உள்ள தேசிய இன "ஒடுக்குமுறை முற்றிலுமாக ஒரு பெருந்தேசிய இன ஒடுக்குமுறையைச் சார்ந்ததல்ல. அரசமைப்பு என்ற கட்டமைப்பின் மூலம் தேசிய இனங்கள் ஒடுக்கப்படுகின்றன. அரசமைப்பில் தலைமை தாங்கும் பெருமுதலாளிகளும் அதில் உறுப்பாயுள்ள நிலப் பிரபுக்களும், பெருமுதலாளிகளுடன் சேர்ந்துள்ள பன்னாட்டு முதலாளிகளும் கட்டமைப்பு ஒடுக்கு முறையின் மூலவர்கள்.

"தங்களது ஒடுக்கும் முறைக்கு ஆதரவாகப் பெரும் பகுதி மக்களைத் திரட்டிக்கொள்வதற்காக இந்துமதவாதத்தைத் துணைக் கொள்கிறார்கள்".

"தனிப்பெருந் தொகையினரான இந்தி பேசும் மக்களுக்குப் பெருமிதம் ஊட்டி தன் பின்னால் அணிதிரட்டிக்கொள்வதற்கும் ... 'பாரத தேசியத்திற்குப்' பொதுமொழி ஒன்றினை ஏற்படுத்துவதற்கும் இந்திமொழியை ஆதிக்கநிலையில் வைக்கிறது ஆளும் வர்க்கம்".

மேற்கண்ட வரையறுப்பு முழு உண்மையை விளக்குவதாக இல்லை. பெருமுதலாளிகள் தலைமையிலான முதலாளிய - பார்ப்பனீய இந்தி ஆதிக்க இந்திய அரசு என்பதே முழு உண்மை. பார்ப்பனீய சக்திகளும் இந்தி ஆதிக்க சக்திகளும் பெருமுதலாளிகளுக்குத் துணைபுரிகின்றன என்பதற்கு மாற்றாக அவை இரண்டும் பெருமுதலாளிகள் தலைமையில் உள்ள அரசமைப்பில் உறுப்பு வகிக்கின்றன என்று இருக்கவேண்டும், ஒடுக்குமுறை மற்றும் சுரண்டலால் உருவாகும் பலனில் பெரு முதலாளிகள் பெரும்பங்கு பெறுகிறார்கள்; பார்ப்பனீய சக்திகளும் இந்தி தேசிய இனமும் தங்கள் தங்கள் பங்கைப் பெறுகிறார்கள். (வர்ண - சாதி ஒடுக்குமுறை - இந்துவல்லாத மதங்களைப் புறக்கணித்தல் - நிறுவனங்களை நிர்வகிக்கும் அதிகாரக் கட்டமைப்பு மற்றும் அலுவல்களில் பெரும்பங்கும் மேலாதிக்கமும்



படிப்பகம்

www.padippakam.com

என பார்ப்பனீய சக்திகள் பலன்பெறுகின்றன. இந்திய அலுவல் மொழியாக இந்தி இருப்பதால் மொழி உள்ளிட்ட பண்பாட்டுத் துறையிலும் வேலைவாய்ப்பிலும் தொழில் துறையிலும் இந்தி தேசிய இனமக்கள் கூடுதல் பங்கு பெறுதல்.)

அடுத்து, நிலக்கிழார்கள் அரசமைப்பில் ஓர் உறுப்பாக இல்லை. அரசமைப்பின்மீது செல்வாக்கு செலுத்தும் வெளி சக்தியாகவே இருக்கிறார்கள். வேளாண் அரங்கில் முதலாளிய உற்பத்தி முறை மேலோங்கி நில முதலாளியம் வளர்ந்துள்ளதும் – நிலக்குவியல் குறைந்து வருவதும் இம்முடிவுக்குச் சான்றுகள். குத்தகை, வாரம் என்ற வடிவத்தில் உபரியைச் சுரண்டும் நிலப்பிரபுத்துவம் முதன்மைப் பாத்திரம் வகிக்கவில்லை; அது வளரும் போக்கிலும் இல்லை.

தொலைக்காட்சி மொத்த நேரம் 7 மணி என குறிப்பிட்டிருப்பது மாற்றப்படவேண்டும். தற்போது அதிகரிக்கப் பட்டுள்ளது. எப்படி இருப்பினும் சென்னைத் தொலைக் காட்சிக்கு ஒதுக்கப்படும் நேரம் 3½ மணி மட்டுமே என்பதில் மாற்றமில்லை.

எதிர்காலத் திட்டமும் இலக்கும் இல்லாமல் தமிழ் இனப் பாதுகாப்பு அரண்கள் என்று சில அமைப்புகள் தங்கட்டு பெயர் சூட்டிக்கொள்கின்றன. டெல்லி அதட்டினால் இவைகள் சரணாகதி அடைந்து விடுகின்றன. டெல்லி அனுமதிக்கும் வரம்புக்குட்பட்டு தங்கள் வசதிக்கேற்ப இந்த அமைப்புகள் அவ்வப்போது எதிர்ப்பு அரசியல் பேசும். இப்படிப்பட்ட சந்தர்ப்பவாத அமைப்புகளைக் கடந்து, தமிழ் மக்கள் தன்னுரிமை முழக்கத்தைக் தங்கள் கையில் எடுக்க வேண்டும். தமிழ்த் தேசிய இனத்தின் உரிமை, வளர்ச்சி, சமூக மாற்றம் ஆகியவற்றிற்குரிய ஆக்கப்பூர்வமான திட்டமும் எதிர்கால இலக்கும் தன்னுரிமை முழக்கத்தில்தான் அடங்கியுள்ளது.

25/5, வாய்க்கால் தெரு
சிதம்பரம் – 608 001
நாள்: 13–3–92

**பெ. மணியரசன்**
பொதுச் செயலாளர்
தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்கட்சி



படிப்பகம்

www.padippakam.com

உள்ளே

I தன்னுரிமை எதற்கு? 5-25

II தன்னுரிமைத் தீர்மானங்கள் 26-48

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தேசியத் தன்னுரிமைத் தீர்மானங்கள்

## I தன்னுரிமை (Self-Determination) ஏன்?

1950, *ஜனவரி* 26-*ஆம் நாள் செயலுக்கு வந்த இந்திய அரசமைப்புச் சட்டம் தனது முகப்புரையில் அனைத்து மக்களுக்கும் மாபெரும் வாக்குறுதிகள் அளித்தது.*

**சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதி; சிந்திக்க, கருத்துரைக்க, நம்பிக்கை கொள்ள, சமயப்பற்று வைக்க மற்றும் வழிபட உரிமை; சமுதாய அந்தஸ்து மற்றும் வாய்ப்பு ஆகியவற்றில் சமத்துவம்.**

**இவற்றை அனைவருக்கும் மேம்படுத்துதல்; தனிநபர்களின் கண்ணியத்தை உறுதிப்படுத்துவதுடன் கூடிய சகோதரத்துவம் மற்றும் தேசத்தின் ஒற்றுமை, ஒருமைப்பாடு.**

*இவைகள் முகப்புரையின் வாக்குறுதிகள்.*

படிப்பகம்

www.padippakam.com

இவைகள் வெறும் அலங்கரிக்கப்பட்ட சொல்லடுக்குகளாக முகப்புரையில் கொலுவிருக்கின்றன என்பதே நாற்பதாண்டுகால அனுபவம்.

தேசிய இலத்திற்குரிய **சமூகநீதி** கிடைக்கவில்லை. வர்ண-சாதி ஊனத்திலிருந்து மீள்வதற்குரிய **சமூகநீதியும்** உரியவாறு கிடைக்கவில்லை.

வறுமையிலிருந்தும், வேலையின்மையிலிருந்தும் பாது காத்துக் கொள்வதற்கான **பொருளாதார நீதி** கிட்டவில்லை; விருப்பப்படி அரசமைப்பை உருவாக்கிக் கொள்ளும் **அரசியல் நீதியும்** கிடைக்கவில்லை.

ஆளும் வர்க்கமும், ஆட்சியாளர்களும் அனுமதிக்கும் **வரம்புக் குட்பட்டு** சிந்திக்கவும், கருத்து வெளியிடவும் மட்டுமே **உரிமை** இருக்கிறது.

இந்தி மொழியை அலுவல் மொழியாகத் திணிக்கும்போது தேசிய இனங்களிடையே **சமத்துவம்** என்பதற்கு வாய்ப்பே இல்லை.

தனித்தனி தேசிய இனங்களிடையே சமத்துவ அடிப்படையில் நிலவவேண்டிய **சகோதரத்துவம்** மறுக்கப்படுகிறது.

தேசிய இனங்கள் தங்கள் தனித்தன்மையை அழித்துவிட்டு, இந்தி மொழி மற்றும் இந்துமதப் பண்பாடு, குறிப்பாக வர்ண சாதி வேறுபாடு மற்றும் விதிக்கோட்பாடு ஆகியவற்றில் சங்கமம் ஆகிவிடும் 'தேசிய ஒருமைப்பாடு' கட்டாயமாக்கப் படுகிறது.

வேதகாலப் பண்பாட்டை உயர்த்திப்பிடிக்கும் வகையில் இந்தியாவிற்குப் **'பாரதம்'** என்று அரசமைப்புச் சட்டத்தில் பெயர் சூட்டியதன் மூலம் 'மதச்சார்பற்ற அரசு' என்பதில் உள்ள போலித்தனமும் அம்பலமாகிறது.

## நாடு முழுவதும் குமுறல்—கொந்தளிப்பு

சமுதாய, பொருளாதார, அரசியல் முனைகளில் வஞ்சிக்கப் பட்ட இந்திய நாட்டு மக்கள் வெவ்வேறு அளவுகளில் குமுறிக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருக்கிறார்கள்; பல்வேறு வடிவங்களில் கொந்தளிக்கிறார்கள்.

சுயநிர்ணய உரிமைக்காக பஞ்சாப், சுதந்திர நாட்டுக்காக காஷ்மீர், நாகாலாந்து, மணிப்பூர் ஆகியவை போர்க்களத்தில் நிற்கின்றன. அயலாரை வெளியேற்ற அஸ்ஸாம், தனி மாநிலத்திற்காக ஜார்கண்ட், உத்தர்கண்ட், போடோலாந்து மற்றும் கூர்க்காலாந்து ஆகியவற்றின் செருக்களங்கள் இன்றைய சரித்திரம்.

ஆலை முதலாளிகளின் சூறையாடலுக்குப் பலியிடப்பட்ட விவசாயிகளின் வாழ்வுக்காக உத்தரப் பிரதேசத்திலும், மராட்டியத்திலும் கொந்தளிப்பு, நக்சல்பாரி பாதையில் புரட்சி என்று ஆதிவாசிகளை மையப்படுத்தி ஆந்திரப் பிரதேசத்தில் போராட்டம், இந்தித்திணிப்பை எதிர்த்து — இட ஒதுக்கீட்டில் நீதிகேட்டு தமிழ்நாட்டில் பொறுமல்கள் — போராட்டங்கள்!

## அனைத்திந்தியத் தன்மையில் எழுச்சி இல்லை

சமூக, பொருளாதார, அரசியல் அரங்குகளில் வஞ்சிக்கப்பட்ட மக்களின் ஆத்திரங்களுக்கும், போராட்டங்களுக்கும் அடிப்படைக் காரணங்கள் அனைத்திந்தியத் தன்மை வாய்ந்தவை. ஆனால், இப்போராட்டங்களில் அனைத்திந்திய நோக்குமில்லை; போக்குமில்லை.

இப்பிரச்சினைகளுக்குத் தீர்வைத்தேடி அனைத்திந்தியக் கட்சிகள் ஜனநாயக முழக்கத்தை முன்வைக்கவில்லை; போராட்டமும் நடத்தவில்லை.

தேசிய இனப் பிரச்சினையை ஒட்டி நடைபெறும் போராட்டங்களை, முதலாளித்துவ மற்றும் பெரும்பாலான அனைத்திந்திய இடதுசாரிக் கட்சிகள் — 'பிரிவினைப் போராட்டங்கள்', 'ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து' என்ற அளவில்தான் பார்க்கின்றன; அவற்றை எதிர்க்கின்றன. இப்போராட்டங்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் வழங்கப்படவேண்டிய உரிமைகள் மறுக்கப்படுவதால் எழுகின்றன என்பதை இக்கட்சிகள் நடைமுறையில் அங்கீகரிக்கவில்லை. அத்துடன் ஆட்சியிலிருக்கும்



படிப்பகம்

www.padippakam.com

கட்சிகள் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் அரசியல் சாதுரியத்துடன் இப்பிரச்சினையை அணுகுகின்றன.

அனைத்திந்தியத் தன்மை வாய்ந்த பிரச்சினைகளைத் தீர்க்க விவசாயிகள் போராடும்போது, ஆளுங்கட்சி என்றால் அடக்கும்; எதிர்க்கட்சி என்றால் ஒப்புக்கு ஆதரிக்கும். வர்ண — சாதி அமைப்பால் வரலாற்று ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் இட ஒதுக்கீட்டில் நியாயம் கேட்டு எழுச்சி கொள்ளும்போதும் இக் கட்சிகள் இவ்வாறே நடந்து கொள்கின்றன.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், மக்கள் குமுறி கொந்தளிக்கும் பிரச்சினைகளில் அனைத்திந்தியக் கட்சிகள் அவர்களைக் கைவிட்டுவிடுகின்றன என்றே கூறலாம். தனித் தன்மை வாய்ந்த தேசிய இனப்பிரச்சினைகளும், வர்ண — சாதிப் பிரச்சினைகளும் அடிப்படையான இந்தியச் சிறப்பம்சங்கள் என்பதை இக்கட்சிகள் முழு அளவில் ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்விருவகைப் பிரச்சினைகளிலும், பொதுவாக காங்கிரஸ் கட்சியின் நிலைபாட்டையே வெவ்வேறு அழுத்தங்களில் இதர அனைத்திந்தியக் கட்சிகள் கொண்டிருக்கின்றன.

அனைத்திந்திய கட்சி என்று சொல்வதற்குரிய முழு அர்த்தத்தில், ஒப்பீட்டளவில் இன்று விளங்கக்கூடிய ஒரே கட்சியான காங்கிரசின் செல்வாக்கும் சுருங்கி வருகிறது. தமிழ்நாடு, அஸ்ஸாம், பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் உடனடி எதிர்காலத்தில் மீண்டும் தலைதூக்க முடியாத பின்னடைவில் காங்கிரஸ் உள்ளது. ஆந்திரப்பிரதேசத்திலும் காங்கிரசிற்கு ஏகபோகமில்லை. இங்கெல்லாம் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படையில் மாநிலக் கட்சிகள் வளர்ந்துள்ளன.

நாட்டு விடுதலை என்ற ஏகாதிபத்தியத்திற்கு எதிரான 'தேசியக்' கோரிக்கை நிறைவேறிவிட்ட பிற்காலத்தில் இந்தியாவின் தேசிய இனப் பிரச்சினை புதிய பரிமாணத்தை - புதிய வடிவத்தைப் பெற்றது. இந்தப் புதிய மாற்றத்தை காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்திந்தியக் கட்சிகள் முழு அளவில் அங்கீகரிக்க மறுக்கின்றன. விடுதலைப் போராட்ட காலத்தில்



படிப்பகம்

www.padippakam.com

எழுப்பப்பட்ட 'இந்திய தேசிய' முழக்கத்தையே இன்றும் பிரதானமாக அக்கட்சிகள் முன் வைக்கின்றன.

சுதந்திர இந்தியாவில் ஒவ்வொரு தேசிய இனமும் மற்றும் இனக்குழுவும் தனது மொழி, பண்பாடு, பொருளாதார வாழ்வு' அரசியல் இறையாண்மை ஆகிய அம்சங்களில் வரலாற்றில் தத்தம் அடையாளத்தைப் பதிக்க விரும்புகின்றன; அதற்காக விழித்து எழுகின்றன.

1947, ஆகஸ்ட் 15 வரை எல்லா தேசிய இனங்களும், மற்றும் இனக்குழுக்களும் தங்கள் விடுதலை ஒட்டுமொத்த இந்திய விடுதலையோடு இணைந்திருந்ததை உணர்ந்தன; ஒன்றுபட்டுப் போராடின. ஒட்டுமொத்த இந்திய விடுதலைக்கான ஒரு தேதிக்காக ஒன்றாகக் காத்திருந்தன. அன்று அது வரலாற்றின் முன் தேவையாக - நடைமுறை உத்தியாக இருந்தது.

1947, ஆகஸ்ட் 15-க்குப் பிறகு வறுமை, வேலையின்மை, வர்ண-சாதி ஒடுக்குமுறை மற்றும் அதன் பின் விளைவுகள் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறவும், புதிய வாழ்வை அமைத்துக் கொள்ளவும் ஒவ்வொரு தேசிய இனமும், மற்றும் இனக்குழுவும் ஓர் அனைத்திந்தியப் பொன்னாளுக்காகக் காத்திருக்க முடியாது; அது வரலாற்றுச் சாத்தியமுமில்லை; இன்று அது வரலாற்றின் முன் தேவையுமில்லை; எனவே, இன்று அது நடைமுறை உத்தியாகவுமில்லை.

**ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் ஒவ்வொரு தேசியஇன மக்களும் அவரவர் தேவை – புரிதல் - முதிர்ச்சிக்கேற்ப பிரச்சினைகளுக்கு அவரவர் தீர்வுகாண வாய்ப்பிருக்க வேண்டும். இந்த வாய்ப்பு தான் அனைத்து தேசிய இனங்களும் இந்தியாவின் ஒற்றுமையை மனப்பூர்வமாகப் பாதுகாப்பதற்கு வழிகோலும்.**

உலக அரங்கில்கூட இன்று தேசிய இனப்பிரச்சினை தீர்ந்து போய்விட்ட ஒரு விஷயமல்ல. மாறாக, இன்று இப்பிரச்சினை புதிய அழுத்தம் பெற்றுள்ளது. வெவ்வேறு நாடுகளில் அந்தந்த நாட்டின் தனித்தன்மைக்கேற்ப வெவ்வேறு வடிவமெடுக்கிறது. பாலஸ்தீனம், தென்னாப்பிரிக்கா, நமீபியா மற்றும் ஈழம் ஆகியவற்றில் நடைபெறும் தேசிய இனப் போராட்டங்கள் புதிய



படிப்பகம்

www.padippakam.com

கட்டத்தை எட்டியுள்ளன. சோஷலிச நாடான சோவியத் ஒன்றியத்தில் தேசிய இனப் பிரச்சினை புதிய வீச்சைப் பெற்றுள்ளது. எனவே, இன்று தேசிய இனப் பிரச்சினை என்பது இந்தியப் பிரச்சினையாக மட்டுமின்றி, ஒரு உலகப் பிரச்சினை யாகவுமிருக்கிறது.

## தமிழ்த்தேசியப் பிரச்சினை

இருபதாம் நூற்றாண்டுக்கு விடை கொடுத்து, இருபத் தோராம் நூற்றாண்டுக்குக் கைகொடுக்க உலகம் தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில், தமிழர்களின் வாழ்க்கை நிலையைப் பரிசீலிக்கிறோம். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் மற்றும் சில சோஷலிச நாடுகளிலும் மக்கள் எட்டியிருக்கின்ற பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கைத் தரத்தையும் இவ்வகை யில் தமிழக மக்கள் இருக்கும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த் தால், ‘நெஞ்சு பதைக்கும்; சொல்ல வாய்பதைக்கும்’. அந்நாடு களில் பண்ணைகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு சராசரி யாக கிடைத்திருக்கும் உணவு, உறையுள் வசதியில் கால் பங்கு கூட, கோடிக்கணக்கான நம் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

அரைப்பட்டினியோடு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் அதாவது வறுமைக் கோட்டிற்கு கீழே உழன்று கொண்டிருப்போர் தமிழ்நாட்டில் இரண்டு கோடி பேருக்கும் மேலே. [ஆதாரம்: 7—4—89 அன்று நடந்த மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் தமிழக அரசு தெரிவித்த விவரம்]

1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி தமிழ் நாட்டில் எழுதப்படிக்கத் தெரியாதோர் 47% பேர். குறைந்த பட்ச வசதிகளும், சுகாதாரமும் இல்லாத குடிசைகளில், மற்றும் ஒண்டுக் குடித்தனங்களில் குடியிருந்து குமைவோர், மக்கள் தொகையில் பெரும்பாலோர், சென்னை நகரில் நடைபாதையில் குடும்பம் நடத்துவோர் அந்நகரின் மொத்த மக்கள் தொகையில் 30% பேர். [ஆதாரம்: Madras Institute of Development Studies — MIDS]

மாற்று உடையில்லாதோர், குறைந்தபட்ச துணித்தேவை களை நிறைவு செய்துகொள்ள முடியாதோர் ஏராளம், ஏராளம்!



படிப்பகம்

www.padippakam.com

வறுமைக்கும், சுகாதாரக் கேட்டிற்கும் பலியாகி பிறந்த ஓராண்டுக்குள் இறந்துவிடும் குழந்தைகளின் எண்ணிக்கை தமிழ் நாட்டில் 30%. [ஆதாரம்: MIDS]

கிராமங்களிலும், நகரங்களிலும் வேலையின்மையால் பாதிக்கப்படுவோர் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிந்திருப்போர் மட்டும் 30 இலட்சத் திற்கும் மேலே.

**தமிழக விவசாயம்**

தமிழகத்தில் விவசாய மக்கள் மேலும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர். காவிரி டெல்டாப் பகுதியில் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி காவிரிநீர் கிடைக்காததால் இருபோகச் சாகுபடி ஒருபோகமாகி அதுவும் புழுதி விதைப்பாகி வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு விளைச்சல் பாதிப்பு; விவசாயத் தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பு பாதிப்பு.

காவிரி நீர் சிக்கலால் 29 இலட்சம் ஏக்கர் பாசனப்பரப்பு பாதிக்கப்பட்டுள்ளது.

ஏரி மற்றும் வாய்க்கால் பாசனம் பெறும் நிலப்பரப்பு சுருங்கி வருவதை பின்வரும் புள்ளி விபரம் விளக்கும்.

| | மொத்த பாசன நிலப்பரப்பு (இலட்சம் ஹெக்டேர்களில்) | | |
|---|---|---|---|
| **பாசனவழி** | 1983 – 84 | 1984 – 85 | 1985—86 |
| வாய்க்கால் | 8.66 | 8.57 | 7.74 |
| ஏரி | 8.07 | 7.15 | 6.72 |
| கிணறு | 9.25 | 10.07 | 10.30 |

[ஆதாரம்: An Economic Appraisal 1986—87 தமிழ்நாடு அரசு]

இதனால் துயரடைவோர் விவசாய மக்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழக மக்களே. தமிழ்நாட்டில் சராசரியாக ஒருவருக்கு கிடைக்கும் நிலையில் இருக்கும் (Percapita Availability) அரிசியின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. இது



படிப்பகம்

www.padippakam.com

1973–74-ல் 352 கிராம்; 1985–86-ல் 282 கிராம்; 1986–87-ல் 275 கிராம்.

(ஆதாரம்: Tamil Nadu – An Economic Appraisal 1987–88)

தேசிய நீரோட்டம் பேசும் டில்லி கோமான்கள் காவிரி நீரோட்டம் வற்றுவதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. காவிரி நதிநீர்த் தகராறை நடுவர் மன்றத்திற்கு விடுமாறு தமிழகம் கோருகின்ற போதிலும் இந்திய அரசோ நடுவர் மன்றம் அமைக்க மறுக்கிறது. 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக் கிடையேயான தண்ணீர்த் தகராறு சட்டம் பிரச்சினையில் தொடர்புடைய ஒரு மாநிலம் நடுவர் மன்றம் கோரினால் மட்டும் போதாது, இந்திய அரசும் விரும்பினால்தான் நடுவர் மன்றம் அமைக்கலாம் என்று நிபந்தனை போடுகிறது.

விவசாய விளை பொருட்களுக்கு விலையைத் தீர்மானிக்கும் அதிகாரத்தைத் தன்னிடமே வைத்திருக்கும் இந்திய அரசு, நெல், கரும்பு போன்றவற்றிற்கு கட்டுப்படியான விலை கொடுக்க மறுக்கிறது. இந்தியப் பெருமுதலாளிகளும், அரசு முதலாளியும் மற்றும் பன்னாட்டு முதலாளிகளும் உற்பத்தி செய்யும் விவசாய இடுபொருட்களின் விலை அதிகரித்துக்கொண்டே வருகிறது. விவசாய மக்களின் நுகர் பொருட்களின் விலையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அந்த விகிதத்தில் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு விலை உயர்வதில்லை. வேலிக்கருவை விறகுக்குச் சந்தையில் கிடைக்கும் விலைகூட கரும்புக்குக் கிடைப்பதில்லை. சர்க்கரை விலை மட்டும் உயரும். சர்க்கரைக்கு இரட்டை விலைக் கொள்கை; கரும்புக்கு ஒற்றை விலைக்கொள்கை.

நெல்லையும் இதர விவசாய விளைபொருட்களையும் சந்தையில் ஒரு சரக்காக பாவிக்க இந்திய அரசுத் திட்டமிட்டே மறுக்கிறது. ஆளும் வர்க்கத்தால் சூறையாடப்பட்டு வரும் மக்கள் ஆத்திரங்கொண்டு அரசியல் ரீதியாக எழுச்சிகொண்டு விடாமல் தடுப்பதற்காக – உணவு தானியங்கள், ஆலைப் பொருட்களை விடவும் மலிவாய் கிடைக்கும் வகையில் – கட்டுப்படியாகாத விலையைத் தீர்மானிக்கிறது இந்திய அரசு. சர்க்கரை, துணி, சோப்பு முதலாளிகளின் இலாப விகிதத்தைப் பெருக்குவதற்கு கரும்பு, பருத்தி, கடலை விலைகளைச் செயற்கையாகக் குறைத்து விவசாயிகளின் வயிற்றிலடிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

உணவு தானியங்கள் மக்களுக்கு மலிவாகக் கிடைக்க வேண்டுமென்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. விவசாயிகளுக்குப் பாதிப்பு இல்லாமல் இதைச் செய்யமுடியும். விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும். அரசு மானியம் கொடுத்து உணவு தானியங்களின் விற்பனை விலையைக் குறைக்க வேண்டும். உணவு தானிய மானியத்திற்காக ஆலை முதலாளிகளிடம் புதிய வரி விதித்தாலும் தகும்.

விவசாய் விளைபொருட்களை இதர பண்டங்களைப் போல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும்.

காலாவதியாகிப் போன நிலப்பிரபுத்துவ உறவுகளை (Feudal Relations) நீக்கவேண்டும். பினாமி நிலங்களை எடுத்து உழவர்களுக்கு வழங்க வேண்டும்.

சிறு, நடுத்தர, பெரிய விவசாயிகளுக்கு விவசாயம் ஒரு இலாபகரமான தொழில் என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும்.

விவசாயத் துறைக்கான சட்டங்களை தமிழக சட்டப் பேரவை தனது விருப்பப்படி தீர்மானிக்கும் உரிமை இன்றில்லை. ஆளுநர் அங்கீகாரம் குடியரசுத் தலைவர் முத்திரை என்ற மூக்கணாங்கயிறுகள் இந்தியப் பேரரசின் கையில் இருக்கின்றன.

## தொழில்

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி விகிதம் படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. சேலம் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசு மறுத்து வருகிறது.

தொழில் துவங்குவதற்குத் தேவையான அடிப்படைக் கட்டுமான (Infra - Structure) வசதி உரிய அளவு உருவாக்கப் படவில்லை. மின் உற்பத்தியில் இந்திய அரசின் கொள்கை பெரும்பாதிப்பை உண்டாக்கியுள்ளது. தங்குதடையின்றி மின்சாரம் உற்பத்தியாகும் நெய்வேலி அனல் மின்நிலையம் இந்திய அரசின் கையில். அதன் முழு உற்பத்தியும் தமிழகத் திற்குக் கிடைப்பதில்லை. தமிழ்நாட்டில் கிடைக்கும் பழுப்பு



படிப்பகம்

www.padippakam.com

நிலக்கரியை எடுத்து வேறொரு இடத்தில் அனல் மின்நிலையம் கட்டிக் கொள்ளவும் தமிழக அரசிற்கு அனுமதியில்லை.

1979-80ஆம் ஆண்டில் 1 யூனிட் மின்சாரத்தை தமிழகத்திற்கு 26.63 காசுக்கு விற்ற இந்திய அரசு இப்போது 56 காசுக்கு விற்கிறது (The Hindu-9—12—89) தமிழ்நாடு அரசு நடத்தும் அனல் மின்நிலையங்களுக்கு வட இந்திய மாநிலங்களிலிருந்து வாங்கப்படும் நிலக்கரிக்கு சுரங்க வாயில் விலை (Pit-head Price) ஒரு டன்னுக்கு ரூ, 250. அங்கிருந்து தமிழ்நாடு வந்து சேரும் போது சுமைகூலியும் சேர்த்து ஒரு டன்னின் அடக்க விலை ரூ 600/- மின்சாரக் கட்டணம் உயர்வதற்கான முக்கிய காரணம் இதுதான் என்கிறார் மின்வாரியத் தலைவர் (The Hindu - 9 – 12 – 89). வடமாநிலங்களில் கிடைப்பதை விட அடக்கவிலை குறைவாக தரமான நிலக்கரியை ஆஸ்திரேலியாவிலிருந்து வாங்கிக் கொள்ள தமிழ்நாடு அரசு கேட்டது. இந்திய அரசு மறுத்துவிட்டது. மின்சாரப் பற்றாக் குறைக்கும், மின் கட்டண உயர்வுக்கும் இந்திய அரசின் அணுகுமுறை முக்கிய காரண மாகும். தமிழ்நாட்டில் பரவவேண்டிய ஒளி வெள்ளத்தின் குறுக்கே மலைபோல் நிற்கிறது இந்திய அரசு.

தூத்துக்குடி துறைமுகம், சேதுக்கால்வாய் திட்டம், ஊட்டி வண்ணப்படச் சுருள் தொழிற்சாலை போன்ற திட்டங்களை செயல்படுத்த விரும்பவில்லை இந்திய அரசு. அகல ரயில்பாதைத் திட்டங்கள் முழு அளவில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. கரூர்-திண்டுக்கல்லுக்கிடையே அது நத்தை வேகத்தில் நகர்கிறது. எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை கட்டுவதற்கும் இன்னும் முன்வரவில்லை.

மனிதகுலத்திற்கு அபாயம் ஏற்படுத்தும் கூடங்குளம் அணு மின் திட்டத்தை மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் திணிக்கிறது.

தொழில்துறையில் தமிழகத்தின் தேவை, விருப்பம் ஆகிய வற்றை இந்திய அரசு சட்டை செய்வதில்லை.

இந்திய அரசின் தொழிற்கொள்கை பெருமுதலாளிகளல்லாத தமிழ்த்தேசிய முதலாளிகள் மற்றும் சிறு தொழில் உரிமை யாளர்கள் ஆகியோரின் நலன்களை பலியிடுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

சிறு தொழிலான தீப்பெட்டி உற்பத்தியில் பன்னாட்டு முதலாளியான விம்கோவை நுழைய விட்டு. சிறு முதலாளிகளை நசுக்குகிறது. சிறிய தொழில்களுக்கான கச்சாப்பொருள் மற்றும் சந்தை வசதிகளைச் செய்து தருவதில்லை. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சிறுதொழில்கள் அதிகம். 1986-87-ல் இந்தியாவில் மொத்தம் நலிவடைந்த சிறுதொழில்களில் 20% தமிழ் நாட்டில்தான் உள்ளது. (An Economic Appraisal 1986-87).

தமிழ்நாட்டின் பாரம்பரிய தொழில்களான கைநெசவும். மீன்பிடிப்பும் இந்திய அரசின் பல்துறைத் தொழில் கொள்கை என்னும் புல்டோசர் சக்கரத்தில் சிக்கி நசுங்குகின்றன. பெரு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு முதலாளிகள் நலன்களை இலக்காகக் கொண்டுள்ள துணிக் கொள்கையாலும். அதன் விலைக் கொள்கையாலும் கைத்தறிக்கு நியாய விலையில் தாராளமாக நூல் கிடைக்கவில்லை. கைத்தறி ரகங்களுக்குப் போதிய சந்தை கிடைக்கவில்லை. இந்திய அரசின் பட்டு ஜரிகை விலைக் கொள்கையால் பட்டுநெசவு பாதிக்கப்படுகிறது; இக்கொள்கை சூரத் ஏகபோக வர்த்தகர்களின் இலாப வேட்டைக்கு கதவைத் திறந்து விடுகிறது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கும் உரிமையை டாட்டா, யூனியன் கார்பைடு போன்ற உள்நாட்டு, வெளிநாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கும், பெரும் வர்த்தகர்களுக்கும் இந்திய அரசு விட்டு விடுவதால் மீனவர்கள் தீராத வறுமையில் தள்ளப் படுகிறார்கள்.

பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் நமது விவசாயம் மற்றும் கிராம வாழ்க்கையில் ஊடுருவி விதை, மாடு, கோழி போன்றவற்றில் மேற்கத்தியச் சார்பை உண்டாக்கி விட்டன. மேற்கத்திய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நமது விதை மற்றும் கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்குப் பதிலாக, மேற்கத்திய தொழில் நிறுவனங்களையே சார்ந்திருக்கும் போக்கை இந்திய அரசு உண்டாக்கி விட்டது. இப்போக்கு நமது தட்ப, வெப்ப நிலைக்கு ஏற்ப நமது மரபு வழிப்பட்ட செல்வங்களை வளர்ப்பதைப் பாதித்துவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறெல்லாம் இந்திய பெருமுதலாளிகளும் பன்னாட்டு ஏகபோக முதலாளிகளும் தமிழ் நாட்டின் சமூக, பொருளதார வாழ்க்கையில் ஒழுங்கின்றி குறுக்கிட்டு சீர்குலைப்பதை தடுக்க நினைத்தாலும் தமிழகத்தில் உள்ள ஒரு ஆட்சியால் முடியாது.

தமிழ்நாட்டிலோ அல்லது இந்தியாவின் ஒரு மூலையிலோ நுழைவதற்கான உரிமத்தை இவர்கள் டெல்லியில் பெற்று விடுகிறார்கள்.

இந்தியப் பெருமுதலாளிகள் மற்றும் பன்னாட்டு முதலாளிகள் ஆகியோர்களது தொழில்களை தேவைக்கு ஏற்ப அரசுடைமை ஆக்குவது, அல்லது கட்டுப்படுத்துவது என்ற முடிவுகளை மேற் கொள்ளாமல் தமிழகத்தின் பொருளாதாரத் துறையில் புதிய இலக்குகளை அடையவே முடியாது. இங்கு தொழில் வளர்ச்சி யைப் பெருக்கவோ, வேலையின்மையை ஒழிக்கவோ முடியாது.

எனவே, பெரும் தொழில்கள், சுரங்கம், தோட்டம் ஆகியவற்றுக்கான உரிமம் தரும் அதிகாரம் தமிழ்த் தேசிய அரசிடம் மட்டுமே இருக்க வேண்டும்.

தொழிலாளர்களின் வேலை நிலைமை, வாழ்க்கைத் தரம், ஜனநாயக உரிமை ஆகியவற்றை மேம்படுத்துவதற்குரிய சட்டங் களை இந்திய அரசின் அனுமதியின்றி உருவாக்கிட இன்று தமிழகத்திற்கு அதிகாரமில்லை. இந்த அதிகாரம் தமிழ் நாட்டிற்கு வேண்டும்.

இப்படிப்பட்ட அதிகாரங்கள் கிடைத்தால் இன்றுள்ள ஒரு மாநில ஆட்சி புரட்சிகர சட்டங்களை நிறைவேற்றி செயல்படுத்துமா என்ற கேள்வி எழலாம். மாநில ஆட்சி அப்படிப்பட்ட சட்டங்களை நிறைவேற்றினால் ஆளட்டும்; இல்லையேல், அதிகாரமில்லை என்று தப்பித்துக் கொள்ளும் ஓட்டை அடைபட்டு அம்பலப்பட்டும். புரட்சிகர நடவடிக்கை களை எடுக்கக் கூடிய புதிய சக்திகள் வரட்டும்; வளரட்டும்.

## நிதி

மாநிலத்தில் பல வரிகள் மூலம் பெருகி நிதிவெள்ளம் டெல்லிக் கருவூலத்தை நோக்கிப் பாய்ச்சப்படுகிறது. மிகக்



படிப்பகம்

www.padippakam.com

குறைந்த வருவாய் தரும் விற்பனைவரி மட்டும் மாநில அரசிடம் உள்ளது. அதிலும் பங்கு கொண்டு, பறித்துச் செல்ல மத்திய விற்பனைவரியைப் புகுத்தியுள்ளது இந்திய அரசு. நேர்முக, மற்றும் மறைமுக வரிகள் மூலம் பல்லாயிரங்கோடி ரூபாயை ஓராண்டில் தமிழ்நாட்டிலிருந்து வசூலித்துக் கொள்ளும் ஒன்றிய அரசு நிர்வாக ஆணை விலை உயர்வு (Administered Price rise) மூலமும் ஏராளமாக அவ்வப்போது வசூலித்துக் கொள்கிறது.

ஆனால், இவ்வளவையும் கொடுத்துவிட்டு தமிழகம் ஒன்றிய அரசிடம் கையேந்தி நிற்கிறது. நிதி ஆணைக்குழு மற்றும் திட்டக்குழு ஆகியவற்றின் கடைக்கண் பார்வைக்கு தமிழகம் காத்திருக்க வேண்டியுள்ளது.

இந்திய ஆட்சியாளர்கள் தங்களது பாரபட்ச அரசியல் சித்து விளையாட்டுக்கு இவ்விரு குழுக்களையும் நெம்புகோல்களாகப் பயன்படுத்துகிறார்கள். நிதி ஆணைக்குழு அரசமைப்புச் சட்ட அங்கீகாரம் பெற்றிருப்பினும் அது எதைஎதைப் பரிசீலிக்க வேண்டுமென்பதை ஒன்றிய அரசு வரம்பு கட்டிவிடுகிறது. அக் குழுவை நியமிப்பதில் தமிழக அரசுக்குப் பங்கேதும் இல்லை.

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், ஜீவன்தாரா போன்ற மக்கள் நலத்திட்டங்களை இந்திய அரசு நேரடிப் பொறுப்பிலேயே நிறைவேற்றுகிறது.

இவைகளெல்லாம் நிதி வழியிலான தேசிய இன ஒடுக்கு முறைக்குச் சான்றுகள்.

### நிர்வாகம்

அன்று வெள்ளை ஏகாதிபத்தியம் பிரிட்டனின் பிடிக்கு உட்பட்ட ஐ.சி.எஸ். நிர்வாகிகளை இந்தியாவிற்கு அனுப்பியது. இன்று டெல்லி, தனது பிடிக்கு உட்பட்ட இ.ஆ.ப. [ஐ.ஏ.எஸ்] இ.கா.ப. [ஐ.பி.எஸ்] அதிகாரிகளைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பு கிறது. இது தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் குறைந்தபட்சக் கூட்டாட்சி முறையையும் தாக்கித் தகர்க்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

மாநில சுயாட்சி இருக்கலாம்; அதிகாரப் பரவல் இருக்கலாம். ஒற்றையாட்சி நடைபெறும் இங்கிலாந்தில் நிர்வாக வசதிக்காக அதிகாரப் பரவல் உண்டு.

தேசிய இனத்திற்குரிய தேசத்தை மாநிலம் என்று குறிப்பிடுவதே அதன் உரிமைகளைக் கொச்சைப் படுத்துவதாகும். எனவே, நமது கோரிக்கை மாநில சுயாட்சியோ, அதிகாரப் பரவலோ அல்ல; தன்னுரிமை, தன்னுரிமை!

தமிழ்நாட்டு அரசுக்கு இறையாண்மை (Sovereignity) வேண்டும். ஒன்றிய அரசுக்கும் இறையாண்மை இருக்கும். சோவியத் ஒன்றியத்தில் தேசியக் குடியரசுக்கும், ஒன்றியக் குடியரசுக்கும் தனித்தனி இறையாண்மை இருப்பது கவனிக்கத் தக்கது.

இரண்டு வகை இறையாண்மை வழங்கப்பட்டால், தேசிய இன குடியரசுக்கும், ஒன்றிய அரசுக்கும் முரண்பாடு ஏற்பட்டால் இந்திய ஒற்றுமை என்னவாகும் என்று சிலர் கேட்கிறார்கள். முழுமையான கூட்டாட்சி அடிப்படையில் இறையாண்மை கொண்ட குடியரசுகளின் ஒன்றியமாக இந்தியா விளங்கும் போது அப்படி ஒரு முரண்பாடு சாதாரணமாக வராது. ஒருக்கால் அப்படி ஒரு முரண்பாடு வந்தால் குடியரசின் இறையாண்மை மீது ஒன்றிய அரசு மேலாதிக்கம் செலுத்த முடியாது. தன்னுரிமை என்பதே அடிப்படையில் தேசிய இனத்தின் இறையாண்மை தானே.

இன்றுள்ள அரசமைப்புச் சட்ட ஏற்பாட்டில் இருப்பதைவிட தன்னுரிமை உள்ள கூட்டாட்சியில் பிளவுக்கான வாய்ப்பு மிகக் குறைவு. ஆயினும், எந்தவகை அரசமைப்புச் சட்டமும் ஒரு சட்டம் என்ற அர்த்தத்தில் ஒற்றுமையைப் பாதுகாத்துவிட முடியாது.

தன்னுரிமைக் கோரிக்கை இந்தியாவைப் பிளவுப்படுத்துவதற்கான ஏகாதிபத்திய சதி முயற்சிக்கே பயன்படும் என்ற வாதமும் வைக்கப்படுகிறது.

ஏகாதிபத்தியத்தின், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன் பிரதானமாக இந்தியா ஒன்றாக இருப்பதில் இருக்



படிப்பகம்

www.padippakam.com

கிறதா அல்லது பிளவுபட்டுப் போவதில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

இந்திய அரசு ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு ஆதரவான அரசே ஆகும். இந்தியப் பெருமுதலாளிகள் ஏகாதிபத்திய நிதி மூலதனத்துடனும் தொழில் நுட்பத்துடனும் மேலும் மேலும் கூட்டுசேர்ந்து வருவதே வளரும் போக்காகும். இந்நிலையில், பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட பரந்த இந்தியாவில் நுழைந்து சூறையாடுவதற்குரிய அனுமதியை ஓரிடத்தில், அதாவது டெல்லியில் பெற்றால் போதும் என்பதே ஏகாதிபத்தியத்திற்கு கூடுதல் வசதியாகும். இன்று முதலாளித்துவ உலகில் நிதி மூலதனம் மையப்படுவதும் ஒருங்கிணைவதும் மேலும் மேலும் அதிகரித்து வருகிறது என்பது முக்கியமாக கவனிக்கவேண்டிய ஒன்று.

எனவே, தன்னுரிமை என்பது பெரும்பாலும் ஏகாதிபத்திய நலனுக்கு எதிராகத்தான் இருக்கிறது. பங்களாதேஷ் விடுதலையை அமெரிக்க ஏகாதிபத்தியம் எதிர்த்தது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தன்னுடைய சுரண்டல் வசதிக்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனித்தனி நாடுகளைச் சேர்த்து ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கியதையும் மறக்க முடியாது.

ஏகாதிபத்திய எதிர்ப்புக்களத்தில் நிற்கும் ஒரு நாட்டைப் பிளவு படுத்துவதில்தான் ஏகாதிபத்தியத்தின் நலன் இருக்கிறது. அந்தக் களத்தில் இந்திய அரசு முனைப்புக் காட்டவில்லை. இந்தியாவைப் பிளவுபடுத்துவது ஏகாதிபத்தியத்தின் புறநிலைத் தேவையாக இன்று இல்லை. தன்னுரிமை என்பது பிரிவினையை நோக்கித்தான் இருக்கும் என்பதில்லை. இன்று, இந்தியாவைப் பொருத்தவரை தன்னுரிமை என்பது ஏகாதிபத்திய நலன்களுக்கு எதிரான முழக்கமாக செயல்படமுடியும்; செயல்படுகிறது.

இந்தியாவின் ஏதோ ஒருபகுதியில் தன்னுரிமைப் போராட்டம் வளர்ந்திருக்கும் போது, அப்போராட்டத் தலைமை முரணற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளிடம் இல்லாது போனால் அதனுள் ஏகாதிபத்தியம் ஊடுருவ வாய்ப்பு உண்டு.



படிப்பகம்

www.padippakam.com

இந்திய மக்களின் புதுவாழ்வுக்கு வாசலைத்திறந்து விடுவதாக தேசியத் தன்னுரிமை விளங்குகின்ற நிலையில் உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் தன்னுரிமை அணிவகுப்பில் முன்னணியில் நிற்பதுதான் ஏகாதிபத்தியச் சதிகளுக்கு இடந்தராத பாதுகாப்பாக இருக்க முடியும்.

ஏகாதிபத்தியச் சதியைக் காட்டி தன்னுரிமையை எதிர்ப்பது, ஆடுவளர்க்க விரும்பாதோர் நரியைக் காரணங் காட்டுவதுபோல் இருக்கிறது.

'பாரத தேசிய' வெறிக்குப் பலியாகி விட்டவர்கள் இயல்பான தேசியத் தன்னுரிமையை குறுகிய பிராந்திய வாதம் என்று சாடுகிறார்கள்.

தன்னுரிமையை கோட்பாடு என்ற அளவில் ஆதரிப்பவர்களில் சிலர் நடைமுறையில் என்றைக்குமே தன்னுரிமையை ஆதரிக்காத நிலைபாட்டை எடுக்கின்றார்கள். இந்தியாவில் முதலாளித்துவத்தின் கீழ் தன்னுரிமையைக் கோரக் கூடாது என்பதும், மக்கள் ஜனநாயகத்தில் அது தேவைப்படாது என்பதும் அவர்களது கருத்தாக இருக்கிறது.

தன்னுரிமையைப் புரட்சிகர சக்திகள் ஆதரிக்கலாமே தவிர அதற்கு முன்னுரிமை கொடுக்கக் கூடாது; ஏனெனில் அது பிரதானமாக தேசிய முதலாளிகளின் நலன்களுக்கே பயன்படும் என்ற கருத்தும் முன் வைக்கப்படுகிறது. இந்த வாதத்தின் அடிப்படை, தன்னுரிமை என்பது தேசிய முதலாளிகளின் முழக்கமே தவிர, பாட்டாளிகளின் முழக்கம் அல்ல என்ற கண்ணோட்டத்தில் அடங்கி இருக்கிறது. இந்தியப் பெருமுதலாளிகளுக்கும், பெருமுதலாளிகளல்லாத தேசிய முதலாளிகளுக்குமிடையில் எழும் முரண்பாட்டின் விளைவே இந்த முழக்கம்; ஒரு வரம்புக்குள் நின்றுகொண்டு இம் முரண்பாட்டை பயன்படுத்தும் உத்தியாக புரட்சிகர சக்திகள் தன்னுரிமையை ஆதரிக்கவேண்டும் என்று வேலி கட்டிக் கொள்கிறது இந்த வாதம்.

தேசிய இனப் பிரச்சினை முதன்மையான பிரச்சினையாக நிலவுகின்றபோது தன்னுரிமையை பாட்டாளி மக்களும் முன் வைக்கலாம்; தேசிய முதலாளிகளும் முன் வைக்கலாம். புரட்சிகர



படிப்பகம்

www.padippakam.com

சக்திகள் முன்வைத்தால் தன்னுரிமை, புரட்சியின் ஒரு கட்டத்தை நிறைவு செய்யும். தேசிய இனப் பிரச்சினை முதன்மையான பிரச்சினையாக அரங்குக்கு வந்துள்ள நிலையில் புரட்சிகர சக்திகள் தன்னுரிமைக்கு முன்னுரிமை கொடுக்காவிடில் எவ்வளவோ காலத்திற்குப் புரட்சியைப் பின்னுக்குத் தள்ளுகின்றன என்றே பொருள். பாட்டாளி மக்களும், தேசிய முதலாளிகளும் தன்னுரிமைப் போராட்டத்தில் ஒரே அணி வகுப்பில் நிற்கவேண்டுமென்பதே இன்றைய தேவை.

இந்தியாவில் இன்று, தேசிய இன ஒடுக்குமுறை முதன்மை யான முரண்பாட்டின் பிரச்சினையாக இல்லை என்றும்; ஒரு பெருந்தேசிய இனம் பிற தேசிய இனங்களை ஒடுக்குகின்ற முறை இல்லை என்றும் சிலர் வாதிடுகின்றனர்.

மொழி, மதம் மற்றும் பண்பாடு, கல்வி, தகவல் தொடர்பு, நிர்வாகம், நீதி, தொழில், விவசாயம் மற்றும் அரசியல் முனைகளில் தேசிய இனங்கள் இந்திய அரசால் ஒடுக்கப்படுகின்றன. இந்த ஒடுக்குமுறை முற்றிலுமாக ஒரு பெருந் தேசிய இன ஒடுக்குமுறை வகையைச் சார்ந்ததல்ல. இது கட்டமைப்பு ஒடுக்குமுறை (Structural oppression) வகையைச் சார்ந்தது. அரசமைப்பு என்ற கட்டமைப்பின் மூலம் தேசிய இனங்கள் ஒடுக்கப்படுகின்றன. அரசமைப்பில் தலைமை தாங்கும் பெரு முதலாளிகளும், அதில் உறுப்பாயுள்ள நிலப் பிரபுக்களும், பெரு முதலாளிகளுடன் சேர்ந்துள்ள பன்னாட்டு முதலாளிகளும் கட்டமைப்பு ஒடுக்கு முறையின் மூலவர்கள்.

தங்களது ஒடுக்குமுறைக்கு ஆதரவாக பெரும் பகுதி மக்களைத் திரட்டிக் கொள்வதற்காக இந்துமத வாதத்தைத் துணை கொள்கிறார்கள். மத அடிப்படையில் ஒன்றாக வைத்திருக்கும்போதே, வர்ண-சாதி அடிப்படையில் மக்களை பிளவுபடுத்தி வைத்திருப்பது இந்து மதத்தின் சிறப்பம்சம். இந்த சிறப்பம்சத்தைத்தான் இந்திய ஆளும் வர்க்கம் தன் நலனுக்குப் பயன்படுத்திக் கொள்கிறது.

தனிப்பெருந் தொகையினரான இந்தி பேசும் மக்களுக்கு பெருமிதம் ஊட்டி தன் பின்னால் அணிதிரட்டிக்கொள்வதற்கும், செயற்கையாக உருவாக்க முனையும் - 'பாரத தேசியத்திற்கு



படிப்பகம்

www.padippakam.com

பொதுமொழி ஒன்றினை ஏற்படுத்துவதற்கும் இந்திமொழியை ஆதிக்க நிலையில் வைக்கிறது இந்திய ஆளும் வர்க்கம். இந்தியாவில் எங்குவேண்டுமானாலும் சென்று தொழில் துவங்க, அங்குள்ள மக்களைச் சூறையாட பெருமுதலாளிகளுக்கு 'பாரத தேசியம்' ஒரு சுதேசித்தன்மையைக் கொடுக்கிறது. இந்த பாரத தேசியத்தை உயர்த்திப் பிடிப்பதில் இந்து மத வெறிகொண்ட வகுப்புவாதிகள் முன்னணியில் நிற்கின்றனர்.

உண்மையில், இந்திபேசும் மக்களும் சமூக, பொருளாதாரத் துறையில் ஒடுக்கப்படுகின்றனர்.

தேசிய இன ஒடுக்குமுறை முதன்மையான பிரச்சினையாக இருப்பதால்தான் இந்தியாவில் நடைபெறும் போராட்டங்களில் பெரும்பாலானவை தேசிய இனப் போராட்டங்களாகவே வெடிக்கின்றன. புதிய புதிய எதேச்சதிகார சட்டங்கள் என்னும் ஆயுதங்களை ஏந்தி இந்திய அரசு கொடூரமாகத் தாக்கும் போராட்டங்கள் பெரும்பாலும் தேசிய இனப் போராட்டங் களாகவே இருக்கின்றன.

அரசியல், பொருளாதார, பண்பாட்டு துறைகளில் முன்னேறத் துடிக்கும் தேசிய இனமக்களின் முயற்சிக்கு மூக்கணாங் கயிறு போட்டு பின்னுக்கு இழுக்கிறது கட்டமைப்பு ஒடுக்குமுறை. இந்த கட்டமைப்பு ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதற்காக நடைபெறும் தேசிய இனத் தன்னுரிமைப் போராட்டத்தோடுதான் சமூக வளர்ச்சியின் அடுத்த படிநிலைக்கான போராட்டம் இணைந் திருக்கிறது. எனவே, இன்று முதன்மையாக முன்னுக்கு வந்துள்ள முரண்பாடு, கட்டமைப்பு ஒடுக்குமுறைக்கும், தேசிய இனத் தன்னுரிமைக்கும் இடையிலுள்ள முரண்பாடே ஆகும்.

இந்த முரண்பாட்டை அனைத்திந்திய அளவில் ஒரே நேரத்தில் தீர்ப்பதற்கு இன்று வாய்ப்பில்லை. ஏனெனில், ஒவ்வொரு தேசிய இனத்தின் புரிதல் மற்றும் முதிர்ச்சி வெவ்வேறு மட்டங்களில் இருக்கின்றன.

துணைக்கண்டமாக விளங்கக் கூடிய இந்தியாவில் சுதந்திரப் போராட்ட காலத்தைப் போலவே ஒரே சீரான அனைத்திந்திய அரசியல் எழுச்சி உருவாக இப்போது வாய்ப்பில்லை. இந்நிலை



படிப்பகம்

www.padippakam.com

யில் தன்னுரிமைக்கான போராட்டம் பகுதிபகுதியாகத்தான் நடைபெறும்.

தமிழ்த்தேசியத் தன்னுரிமைப் போராட்டம் தமிழகத்தை மையமாகக் கொண்டு நடைபெற வேண்டியுள்ளது.

## தன்னுரிமை மாநாடு

தமிழ்த்தேசியத் தன்னுரிமைக் கோரிக்கைகளைத் தீர்மானங்களாக வடிக்கவும், அவற்றிற்கான இயக்கங்களை முடிவு செய்யவும் இம்மாநாடு நடைபெற்றது.

அதில் நிறைவேற்றப்பட்ட தன்னுரிமைத் தீர்மானங்கள் அடுத்த பகுதியில் உள்ளன.

**கடந்தகாலச் சாதனைகளிலிருந்து வீரம் பெறுவோம்.**

**கடந்தகாலத் தவறுகளிலிருந்து பாடம் பெறுவோம்.**

**தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம்.**

**தமிழ்த்தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்.**

*— தமிழ்த் தேசியத் தன்னுரிமை ஒருங்கிணைப்புக் குழு*



படிப்பகம்

www.padippakam.com

## II தீர்மானங்கள்

தீர்மானம்: 1

*இந்திய ஒன்றியத்தை முழுமையான கூட்டாட்சியாக மாற்றுக.*

இறையாண்மை பெற்ற தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியமாக இந்தியாவைப் பிரகடனம் செய்ய வேண்டும்.

பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமை (Self - determination) தேசிய இனங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இந்தியாவை 'பாரத்' என்று அழைப்பதையும் தேசிய இனக் குடியரசை 'மாநிலம்' என்று அழைப்பதையும், நீக்க வேண்டும்.

ஒன்றிய அரசுக்கு படை, நாணய அச்சடிப்பு அனைத்திந்திய தகவல் – தொடர்பு, வெளியுறவில் அரசியல் பகுதி ஆகியவற்றுக்கான அதிகாரங்கள் மட்டுமே இருக்க வேண்டும்.

இதர அனைத்து அதிகாரங்களும் தேசிய இனக் குடியரசுகளுக்கே.

அரசமைப்புச் சட்டம் ஒன்றிய அரசுக்கு இருப்பதைப் போலவே, தனியாக ஒவ்வொரு தேசிய இனக் குடியரசுக்கும் இருக்க வேண்டும்.

தீர்மானம். 2

*தன்னுரிமை பெற்ற தமிழ்த் தேசியக் குடியரசு வேண்டும்*

இறையாண்மை கொண்ட தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியமாக இந்தியாவைத் திருத்தி அமைப்பதற்கு உடனடி வாய்ப்பு இல்லை என்றாலும் இந்திய ஒன்றியத்திற்குள் செயல்



படிப்பகம்

www.padippakam.com

படும் இறையாண்மை கொண்ட — தன்னுரிமை பெற்ற தமிழ்த் தேசியக் குடியரசு உடனடியாக அமைக்கப்பட வேண்டும்.

**தீர்மானம்: 3**

## குடியுரிமை அளிக்கும் அதிகாரம் தமிழ்த் தேசிய குடியரசுக்கும் இருக்க வேண்டும்

தற்போது குடியுரிமை அளிக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்கு மட்டும் இருக்கிறது. ஒரு கூட்டாட்சியில் தேசிய இனக் குடியரசுக்கு குடியுரிமை அளிக்கும் அதிகாரம் அவசியம் இருந்தாக வேண்டும். குடியுரிமை அளிக்கும் அதிகாரம் இல்லாதபோது ஒரு தேசிய இனத்திற்கான சட்டப்பூர்வ ஆவணம் இல்லாத நிலை ஏற்படுகிறது.

ஒன்றிய அரசின் குடியுரிமை மட்டும் இருப்பது ஒரு தேசிய இன மக்களின் வாழ்வெல்லைக்குள் வேறு தேசிய இன மக்கள் தங்குதடையற்று, பெருமளவில் உட்புகும் வாய்ப்பைத் தருகிறது. இதனால் அந்த ஒரு தேசிய இன மக்களின் தனித்தன்மை பாதிக்கப்படுகிறது; அம்மக்கள் பொருளாதார ரீதியில் சுரண்டப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது; இது அந்த ஒரு தேசிய இன மக்கள் அரசியல் முடிவெடுப்பதில் அங்குள்ள அரசியல் சக்திகளின் பலாபலத்தில் குறுக்கிட்டு, திசை மாற்றுகிறது.

'அயலவரை வெளியேற்றும்' அஸ்ஸாம் போராட்டம் இதற்கு ஒரு சான்று. இப்பிரச்சினையில் சீர்த்தன்மையைப் பராமரிக்க தேசிய இன ஆட்சி குடியுரிமை வழங்கும் அதிகாரம் பெறுவதற்கு உதவும். தமிழ்த் தேசியக் குடியரசு வழங்கும் குடியுரிமையில் ''தமிழர்'' [இந்தியாவின் குடிமகன் / குடிமகள்] என்றும், இந்திய அரசு வழங்கும் குடியுரிமையில் இந்தியாவின் குடிமகன் / குடிமகள் [தமிழர்] என்றும் குறிப்பிட வேண்டும்.

எனவே,

**தமிழ்த் தேசியக் குடியரசுக்கு குடியுரிமை வழங்கும் அதிகாரம் வேண்டும்.**



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்த்தேசியக் குடியரசின் குடியுரிமை பெற்றவர்கள் இந்திய அரசின் குடியுரிமை பெற்றவர்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**தீர்மானம்: 4**

***நாடாளுமன்ற குடியரசுகளின் அவைக்கு சம உரிமை வேண்டும்.***

நாடாளுமன்ற மாநிலங்களவையை தேசிய இனக் குடியரசு களவையாக மாற்றி அமைக்க வேண்டும்.

நாடாளுமன்ற மக்களவைக்கும், தேசிய இனக் குடியரசுகள் அவைக்கும் சமமான அதிகாரம் இருக்கவேண்டும்.

குடியரசுகளவையில் மக்கள் தொகை அடிப்படையில் இல்லாமல் எல்லா தேசிய இனங்களுக்கும் சமமான எண்ணிக் கையில் உறுப்பினர்கள் இருக்கவேண்டும்.

**தீர்மானம்: 5**

***ஆளுநர் பதவியும், ஆட்சிக் கலைப்பும் ஒழிக்கப்பட வேண்டும்.***

ஒன்றிய அரசின் முகவராக அனுப்பப்படும் ஆளுநர் தேசிய இன மக்களுக்கான முதலமைச்சரை நியமிக்கும் (விதி 164) அதிகாரம் பெற்றிருப்பது ஜனநாயகத்திற்கு இழுக்கு மட்டுமல்ல; அது ஒரு கட்டமைப்பு ஒடுக்குமுறையுமாகும். தேசிய இன மக்களின் சட்டப்பேரவை நிறைவேற்றும் மசோதாக்கள் ஆளுநரின் கையொப்பம் பெற்றபின்னர்தான் சட்டமாகும் என்று உள்ள நிபந்தனை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலனி ஆட்சியின் தொடர்ச்சியாகவே நீடிக்கிறது.

ஒரு ஆட்சிக்குப் பெரும்பான்மை பலம் இருக்கிறதா இல்லையா என்பதையெல்லாம் பொருட்படுத்தாமல் அந்த ஆட்சியைக் கலைப்பதற்கான பரிந்துரையை மத்திய அரசுக்கு ஆளுநர் செய்யமுடியும். (விதி 356)



படிப்பகம்

www.padippakam.com

தேசிய இனமக்களின் மீது ஒடுக்குமுறைக் கருவியாகச் செயல்படும் ஆளுநரின் அரண்மனை வாழ்க்கைச் செலவுகள் அனைத்தையும் அந்த தேசிய இன மக்களே சுமப்பது துன்பியல் நாடகத்தின் உச்சநிலை சோகமாகும்.

தக்க காரணம் சொல்லாமலும், ஆளுநரின் பரிந்துரை இல்லாமலும் கூட நினைத்த மாத்திரத்தில் மாநில ஆட்சியையும், சட்டப் பேரவையையும் கலைக்கும் அதிகாரம் இந்திய அரசிற்கு இருக்கிறது. (விதி 356)

இந்திய அரசின் உத்தரவுகளை நிறைவேற்றவில்லை என்று காரணங் காட்டி (விதி 256, 257) மாநில சட்டப் பேரவையை இந்திய அரசு கலைக்கலாம். (விதி 365)

ஒன்றிய அரசில் அமைச்சரவை இல்லாத காலம் என்று ஒன்று இருக்க முடியாது. ஆனால், மாநிலத்தில் அமைச்சரவை இல்லாத காலம் இருக்கலாம்; அப்போது நேரடியான ஒன்றிய ஆட்சி நடைபெறும். இவைகளெல்லாம் கட்டமைப்பு ஒடுக்கு முறையின் சில கோர வடிவங்கள்.

இந்த ஒடுக்கு முறையிலிருந்து தமிழகம் மீட்கப்படவேண்டும் எனவே,

**தமிழகத்தில் ஆளுநர் பதவி ஒழிக்கப்பட வேண்டும்.**

**சட்டப் பேரவையில் பெரும்பான்மை பெற்றவரை அமைச்சரவை அமைக்க அழைத்தல், பதவிப் பிரமாணம் செய்து வைத்தல், தற்காலிக காபந்து அல்லது கூட்டு அமைச்சரவை அமைத்தல் போன்ற பணிகளைச் செய்ய தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய தேசிய இனக் குடியரசுத் தலைவர் பதவி உருவாக்கப்பட வேண்டும்.**

**தமிழகத்தில் அமைச்சரவையையோ, சட்டப் பேரவையையோ கலைக்க இந்திய அரசுக்குள்ள அதிகாரம் ரத்து செய்யப்பட வேண்டும்.**

**தமிழ்நாட்டில் அமைச்சரவை இல்லாத காலம் என்ற ஒன்று இருக்கக் கூடாது.**



படிப்பகம்

www.padippakam.com



## குற்றவியல், உரிமையியல், தொழிலாளர் உச்சநீதிமன்றம் தமிழக வரம்புக்குள் இருக்க வேண்டும்.

ஒரு கூட்டாட்சியில் உரிமையியல், குற்றவியல் தொழிலாளர் பிரச்சினைகளில் உச்ச நீதிமன்றம் (Supreme Court) ஒன்றிய அரசின் வரம்பிலும், கட்டுப்பாட்டிலும் இருக்கத் தேவையில்லை. தொலைதூரத்தில், மிகுந்த பொருட்செலவு ஆகக் கூடியதாய் உள்ள டெல்லி உச்ச நீதிமன்றத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து குற்றவியல், உரிமையியல் மேல்முறையீடுகளுக்கு செல்லுவோர் வசதி படைத்த மிகச் சிலராகவே இருக்க முடியும். எனவே, இவ்வகை வழக்குகளில் இது வெகுமக்களுக்குப் பயன்பாடற்ற தாகவே இருக்கிறது.

உச்சநீதிமன்றம் மாநிலங்களிலுள்ள நீதித்துறையை கட்டுப் படுத்தும் வகையில் உயர்நீதிமன்ற (High Court) நீதிபதிகள் நியமன ஏற்பாடு இருக்கிறது.

உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியையும், மற்ற நீதிபதிகளையும் இந்திய அரசு நியமிக்கிறது. (விதி 216, 217) இவ்வேற்பாடு தேசிய இனத்தின்மீது செலுத்தப்படும் நீதித் துறைச் சார்ந்த ஒடுக்குமுறை ஆகும்.

எனவே,

**தமிழ்த் தேசியக் குடியரசின் அரசமைப்புச் சட்டம் தொடர்பான பிரச்சினைகள், குற்றவியல், உரிமையியல் மற்றும் தொழிலாளர் மேல் முறையீடுகள் ஆகியவற்றுக்கான இறுதி நீதிமன்றமாக தமிழகத்தின் உயர்நீதிமன்றமே விளங்க வேண்டும்.**

**இந்திய அரசமைப்புச் சட்டம் தொடர்பான பிரச்சினைகள், ஒன்றிய அரசுக்கும், தேசியக் குடியரசுக்கும் இடையிலான பிரச்சினைகள், தேசியக குடியரசுகளுக்கு இடையிலான பிரச் சினைகள் இவற்றுக்கான நீதிமன்றமாகவே ஒன்றிய உச்சநீதி மன்றம் இருக்க வேண்டும்.**



படிப்பகம்

www.padippakam.com

தீர்மானம்: 7

## வரிவிதித்து வசூலிக்கும் அனைத்து அதிகாரங்களும் தமிழ்த்தேசியக் குடியரசிற்கே

### ஒன்றிய அரசிற்கு தமிழகம் வசூலித்ததில் ஒரு குறிப்பிட்ட பங்கு மட்டுமே.

மாநில அரசுக்குள்ள பொறுப்புகளுக்கு ஏற்றாற்போல் அதற்கான வருவாய் வழி இல்லை. இரண்டுக்கும் இடைவெளி மலைக்கும், மடுவுக்குமாக உள்ளது. வரி விதிப்பதிலும் வசூலித்ததில் மாநிலத்திற்குப் பங்கு கொடுப்பதிலும் வஞ்சக மான ஏற்பாடுகளை ஒன்றிய அரசு செய்திருக்கிறது.

மாநில அரசு விற்பனைவரி விதிக்கும் அதிகாரத்தை மட்டும் பெற்றிருக்கிறது. அதிலும் தலையிட்டு வசூலித்துக் கொள் வதற்காக 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனைவரிச் சட்டம் வழி திறந்து விட்டது.

வருமானவரியில் மாநிலத்திற்கு **பங்கு கொடுக்க வேண்டும்.** என்று அரசமைப்புச் சட்டவிதி 270 கூறுகிறது. வருமான வரியில் பெரும்பங்கை மாநில அரசுக்கு மறுக்கும் வகையில் 1959-ல் ஒன்றிய அரசு சட்டத் திருத்தம் கொண்டு வந்தது. இதன்படி நிறுவனங்களில் வசூலிக்கப்படும் வருமானவரி, நிறுவன வரி (Corporate Tax) என்று பிரிக்கப்பட்டது இதில் மாநில அரசிற்குப் பங்கு இல்லை. எஞ்சிய தனிநபர் வருமான வரியிலும் பங்கு கொடுக்காத ஒரு பகுதியை ஒன்றிய அரசு பின்னர் உருவாக்கியது. வருமானவரி சர் சார்ஜ் என்பதே அது.

விதி 272 எக்சைஸ் வரி முதலான சில வரிகளில் மாநிலத் திற்குப் **பங்கு கொடுக்கலாம்** (may be divided) என்று கூறுகிறது. இதிலேயும் மாநில பங்கை அபகரிக்கும் நோக்கத்துடன் பங்கிடத் தேவையில்லாத கூடுதல் எக்சைஸ் வரி, (Additional Excise Duties) துணை எக்சைஸ் வரி (Auxilliary Excise Duties) என்று பிரிவுகளை உண்டாக்கி வசூலிக்கிறது.

ஒன்றிய அரசின் பொதுத்துறை மற்றும் தனியார் துறை தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு நிலம், தண்ணீர், மானிய



படிப்பகம்

www.padippakam.com

விலையில் மின்சாரம் உள்ளிட்ட பல வசதிகளைச் செய்து தருவதன் மூலம் ஒரு நிறுவனத்தை அமைக்கும் பொறுப்பில் கிட்டத்தட்ட 50%ஐ மாநில அரசு ஏற்கிறது. ஆனால். அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் மாநிலத்திற்குப் பங்கு கிடையாது.

அரசமைப்புச் சட்டவிதிப்படி அமைக்கப்படும் நிதி ஆணைக் குழுவும் நிதிப்பங்கீட்டை சுயேச்சையாக முடிவு செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. நிதி ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிப்பதில் மாநில அரசுகளுக்கு எந்த பங்கும் இல்லை. ஒன்பதாவது நிதி ஆணைக்குழு 'ஒன்றிய அரசின் சிறப்புத் தேவைகள் மற்றும் அதன் தவிர்க்கவியலாத செலவினங்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு நிதிப்பங்கீட்டை முடிவு செய்யுமாறு' உத்தர விடப்பட்டிருக்கிறது.

மாநிலங்களுக்கான பங்கு ஏழாவது நிதி ஆணைக்குழுவில் 26.1% ஆக இருந்தது, எட்டாவது நிதி ஆணைக்குழுவில் 24.1% ஆகக் குறைந்தது.

மாநிலத்திற்குக் கிடைக்கும் குறைவான இந்தப் பங்கிலும் சட்டப்படிச் சேரவேண்டிய தொகை (Statutory transfers) குறைக்கப்பட்டு ஒன்றிய அரசின் விருப்பப்படி சேருகின்ற தொகையே அதிகரிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, மாநிலங் களுக்குக் கிடைத்த நிதிப் பங்கீட்டிற்குள் சட்டப்படி சேர வேண்டியது 1979-84-ல் 43% ஆக இருந்தது; 1985-88-ல் 37.8% ஆகக் குறைந்தது. (I. S. Gulati & K. K. George - E. P .W- 25—7—87)

மாநிலங்கள் நிதிக்கு ஒன்றிய அரசின் விருப்பத்தைச் சார்ந் திருக்கும் போக்கு அதிகரிப்பது மாநிலங்களில் மிச்சம் மீதியுள்ள அரசியல் உறுதிப்பாட்டையும் குலைக்கிறது.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு அளித்துவரும் நிதி வேறுசில மாநிலங்களோடு ஒப்பிடும்போது எவ்வளவு குறைவாக இருக் கிறது என்பது தெரியவரும்.



படிப்பகம்

www.padippakam.com

*மாநிலங்களுக்கான சராசரி தனிநபர் மத்திய உதவி (ரூபாய் கணக்கில்)*

**(Average Percapita Central Assistance to States)**

| மாநிலம் | II திட்டம் ரூ. | III திட்டம் ரூ. | IV திட்டம் ரூ. | V திட்டம் ரூ. | VI திட்டம் ரூ. |
|---|---|---|---|---|---|
| ஆ. பி. | 31.0 | 63 | 53.4 | 138.3 | 208.2 |
| கர்நாடகா | 34.8 | 66 | 57 | 133.8 | 184.0 |
| கேரளா | 29.1 | 72 | 79 | 145.1 | 201.9 |
| **த. நா.** | **32.8** | **55.6** | **47.7** | **121.5** | **161.3** |
| பீகார் | 22 | 46.5 | 58.1 | 118.3 | 223.8 |
| ம. பி | 37.1 | 68.0 | 60.9 | 118.9 | 243.6 |
| உ. பி | 19.1 | 48.3 | 58.1 | 118.3 | 223.8 |

(R. K. Sinha – Fiscal Federation in India)

*இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் ஆறாவது திட்டத்தை ஒப்பிட, தமிழ்நாட்டின் பங்கு சுமார் 5 மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால், பீகாரின் பங்கு இதே காலத்தில் சுமார் 10 மடங்கும், உ. பி.யின் பங்கு சுமார் 12 மடங்கும், ம.பி.யின் பங்கு சுமார் 7 மடங்கும் அதிகரித்துள்ளது.*

**எனவே,**

**ஒன்றிய அரசிற்கு வரிவிதிக்கும் அதிகாரம் இருக்கக் கூடாது. அனைத்து வரிகளையும் விதித்து வசூலிக்கும் அதிகாரம் தமிழ்த் தேசியக் குடியரசிற்கு வேண்டும்.**

**ஒன்றிய அரசின் செலவினங்களுக்காக, தமிழகம் வசூலித்த வரியில் குறிப்பிட்ட பங்கைக் கொடுக்க வேண்டும். இந்தப் பங்குத் தொகையைத் தீர்மானிக்கும்போது அந்தந்த குடியரசின் மக்கள் தொகையைக் கணக்கில் கொள்ள வேண்டும்.**



படிப்பகம்

www.padippakam.com

**தீர்மானம்: 8**

## ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். முறை ஒழிக்கப்பட வேண்டும்

இந்திய ஆட்சிப்பணி (ஐ. ஏ. எஸ்), இந்திய காவல் பணி (ஐ.பி.எஸ்,) ஆகியவற்றின் மூலம் மாநில ஆட்சியின் அனைத்து மட்ட நிர்வாகங்களிலும், நடவடிக்கைகளிலும் ஒன்றிய அரசு தலையிடுகிறது.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் தங்களை உருவாக்கும் இந்திய அரசுக்கே இறுதியாகக் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இவர்களின் மூலம் தமிழக ஆட்சியை அதற்கு அதிகாரமுள்ள துறைகளிலும் ஒன்றிய அரசு கட்டுப்படுத்த முடியும்.

பிறமொழிகளைத் தாய்மொழியாய்க் கொண்டவர்கள், தமிழைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளவர்கள் இங்கு அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள் இது ஆட்சிக்கும் மக்களுக்குமுள்ள இடைவெளியை அதிகரிக்கிறது.

ஆட்சிப்பணி, காவல்பணி ஆகியவை அனைத்திந்தியப் பணிகளாக இருக்கத் தேவை இல்லை. இந்திய அயல்துறைப்பணி (IFS) மட்டும் ஒன்றிய அரசின் வசம் இருக்கலாம்.

எனவே,

**இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல்பணி ஆகிய பணி முறைகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக தமிழக ஆட்சிப் பணி, தமிழகக் காவல் பணி என்று துவக்கப்பட வேண்டும்.**

**தீர்மானம்: 9**

## தமிழ் உள்ளிட்ட அனைத்து தேசிய மொழிகளும் ஒன்றிய அலுவல் மொழியாக வேண்டும்.

## இந்தி ஒன்றே அலுவல் மொழி என்ற திணிப்பு நீக்கப்பட வேண்டும்.

தமிழ் உள்ளிட்ட தேசிய மொழிகளின் மீது ஆதிக்கம் செலுத்தும் வகையில் விதி 343 இந்தி இந்தியாவின் அலுவல்



படிப்பகம்

www.padippakam.com

மொழி என்று கூறுகிறது. இந்தி மொழியை திணிப்பதற்குரிய வழிவகைகளைப் பரிந்துரைப்பதற்கு குழு அமைக்க விதி 344 வழி செய்கிறது.

இந்தியாவின் பல்வேறு தேசிய இனங்களிலிருந்து வசூலிக்கப் படும் நிதியிலிருந்து இந்தியை மட்டும் செழிக்கச் செய்வதற்கான பணம் ஒதுக்க விதி 351 வகை செய்கிறது.

விதி 348 உயர்நீதிமன்ற மொழியாக ஆங்கிலம் இருக்கு மென்று கூறுகிறது. தமிழைப் பயன்படுத்த வேண்டுமானால் குடியரசுத் தலைவரின் அனுமதி வேண்டுமென்கிறது.

சில வேலைவாய்ப்பு, பதவி உயர்வு இவற்றில் இந்தி கற்றிருப்பது நிபந்தனை ஆக்கப்படுகிறது. இந்தி கற்றதற்குரிய கூடுதல் சலுகையாக பதவி உயர்வு வழங்கப்படுவதும் நடக்கிறது.

இவ்வாறெல்லாம் இந்தி ஆதிக்க மொழியாகவும், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டோர் மொழி ரீதியாக இந்தியாவின் முதல்தரக் குடிமக்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். தமிழ் மொழி ஒடுக்கப்படுகிறது. தமிழர்கள் நடைமுறையில் இரண்டாந் தரக் குடிமக்களாக ஆக்கப்படுகின்றனர்.

இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் இணை மொழியாக நீடிக்கும் என்ற நேருவின் உறுதிமொழி மறைமுகமான இந்தித் திணிப்பே.

**இந்தி இந்தியாவின் அலுவல் மொழி என்ற விதி நீக்கப்பட வேண்டும்**

**தமிழ் உள்ளிட்ட அனைத்து தேசிய மொழிகளும் ஒன்றிய அலுவல் மொழியாக்கப்பட வேண்டும்.**

**தமிழ்நாட்டில் கல்வி, நீதி, நிர்வாகம் ஆகியவற்றின் அனைத்து மட்டங்களிலும் தமிழ் மொழியே பயன்படுத்தப்பட வேண்டும்.**



படிப்பகம்

www.padippakam.com

தீர்மானம்: 10

## வேளாண்மைத்துறை அதிகாரங்கள் அனைத்தும் தமிழகத்திற்கே

விவசாயம் மாநிலப் பட்டியலில் அறிவிக்கப்பட்டிருந்தாலும் நடைமுறையில் ஒன்றிய அரசையே சார்ந்திருக்கிறது. பொதுப் பட்டியல் பதிவு 33, 34 மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955 ஆகியவை, விவசாயத்திற்குத் தேவையான உயர் வித்துகள், உரம், பூச்சிமருந்து முதலானவற்றின் உற்பத்தி, அளிப்பு, விநியோகம் ஆகியவற்றையும், விவசாய ஆய்வு மையங் களையும் ஒன்றிய அரசு தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வகை செய்கின்றன.

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் உச்சவரம்பு மற்றும் நிலச்சீர்திருத்த மசோதாக்கள் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறாமல் சட்டமாக முடியாது. தமிழக சட்டப்பேரவை ஏற்கனவே ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பிய பினாமி நிலமெடுப்பு மசோதா சட்டமாகாமல் போனது குறிப்பிடத் தக்கது.

மாநிலங்களுக்கிடையிலான ஆற்றுநீர்த் தகராறில், சமரசம் எட்டப்படாத நிலையில் தொடர்புடைய ஒரு மாநிலமோ அல்லது அனைத்து மாநிலங்களுமோ நடுவர் மன்றம் கேட்டால் கூட ஒன்றிய அரசு விரும்பினால்தான் அம்மன்றம் அமைக்கப் படலாம் என்ற அளவுக்கு 1956, மாநிலங்களுக்கிடையிலான தண்ணீர்த் தகராறு சட்டம் கூறுகிறது. அப்படி நடுவர் மன்றம் அமைக்கும்படி உச்சநீதிமன்றம் கூட ஆணை பிறப்பிக்க முடியாதவாறு இச்சட்டம் தடுக்கிறது. இது ஒன்றிய அரசின் வரம்பற்ற ஆதிக்கத்தையே காட்டுகிறது.

காவிரிநீர்த் தகராறில் தமிழக அரசு முறைப்படி மீண்டும் மீண்டும் கோரியபின்னரும் நடுவர் மன்றம் அமைக்க ஒன்றிய அரசு மறுத்து வருகிறது. இதனால் தமிழகத்திற்கு ஏற்பட்டு வரும் இழப்புகள் அளவிட முடியாதவையாகத் தொடர்கின்றன.

விவசாய விளைபொருட்களின் விலைகளைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை ஒன்றிய அரசு தன் கையில் வைத்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

அது கட்டுப்படியான விலைகளைத் தீர்மானிக்க மறுக்கிறது. இதனால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

ஒன்றிய அரசின் விவசாயக் கொள்கைகளால் தமிழ் நாட்டின் வருமானத்தில் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களின் பங்கு குறைந்து வருவதைப் பின்வரும் அட்டவணைக் காட்டும்.

| ஆண்டு | விவசாயம் மற்றும் அதன் சார்பு தொழில்களின் வருமான பங்கு—சதவீதத்தில் |
|---|---|
| 1970-71 | 39.15% |
| 1975-76 | 37.01% |
| 1980-81 | 27.61% |
| 1985-86 | 22.60% |

Tamil Nadu: An Economic Appraisal (1986-87)

காவிரி நீர் வரத்து பாதிக்கப்பட்ட காலத்திலிருந்து (1975-76) இவ்வருமானப் பங்கு குறைவு விகிதம் அதிகரித்திருப்பது கவனிக்கத் தக்கது.

எனவே,

**வேளாண்மை தொடர்பான அனைத்துவகை சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றி செயல் படுத்துவதற்கான முழு அதிகாரம் தமிழ்த் தேசியக் குடியரசிடமே இருக்க வேண்டும்.**

**அடுத்த தேசிய இனப்பகுதியில் உற்பத்தியாகி, தமிழ் நாட்டில் பாயும் ஆறுகள் தொடர்பாக எழும் தகராறில் தீர்ப்புக் கேட்டு நேரடியாக உச்சநீதிமன்றம் செல்லும் உரிமை தமிழகத்திற்கு வேண்டும்.**

**வேளாண்மையில் தொடர்புள்ள தொழில் நுட்பங்கள் மற்றும் விவசாயத் திட்டங்கள் பற்றி கருத்துப்பரிமாறிக் கொள்ள அனைத்திந்திய அமைப்பு ஒன்று நிறுவலாம்.**



படிப்பகம்

www.padippakam.com



## தொழில்துறை அதிகாரங்கள் அனைத்தும் தமிழகத்திற்கே

தொழில்கள், பொருளுற்பத்தி, அளிப்பு, விநியோகம் ஆகியவை மாநிலப் பட்டியலில் இருந்தாலும் ஒன்றியப்பட்டியல் பதிவு 7 மற்றும் 52 மூலமாகவும், பொதுப்பட்டியல் பதிவு 33 மூலமாகவும் இவற்றின் அதிகாரங்களை இந்திய அரசு எடுத்துக் கொண்டுள்ளது.

1951, தொழில் வளர்ச்சி ஒழுங்குமுறைச் சட்டத்தின் மூலம் பல்வேறு தொழில்கள் ஒன்றியப் பட்டியலில் சேர்க்கப்பட்டன. இன்று 90%க்கு மேலான தொழில்கள் ஒன்றிய பட்டியலில் இந்திய அரசின் கீழ் இருக்கின்றன.

மாநில அரசு தொழில் துவங்க விரும்பினாலோ, இருக்கும் தொழில்களில் மக்களுக்கு ஆதரவான முறையில் தலையிட விரும்பினாலோ அது முடியாது. மின்சாரம் பொதுப்பட்டியலில் இருப்பதால் ஒன்றிய அரசும் மின்நிலையங்கள் அமைக்கிறது. தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் மின்நிலையங்களை மக்கள் சார்ந்திருக்கும் நிலை உள்ளது. மாநில அரசு மின் உற்பத்தியில் தன்னிறைவு காணும் முயற்சிகளை ஒன்றிய அரசு நடைமுறையில் தடுத்து வருகிறது.

வரலாற்று ரீதியாக தொழில் துறையில் முன்னேறிய மாநிலங்களில் ஒன்றாக விளங்கும் தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக வளர்ச்சி வேகம் மிக மோசமாகக் குறைந்து வருகிறது. தொழில் உற்பத்தி 1985-86-க்கு இடையில் அனைத்திந்திய அளவில் சராசரியாக 7.7% அதிகரித்துள்ளபோது, அது தமிழகத்தில் வெறும் 0.43% ஆகவே உள்ளது. (Tamil Nadu, An Economic Appraisal 1986-87).

தொடர்ந்து 1979-84-க்கு உட்பட்ட ஐந்தாண்டுகளில் மொத்த மதிப்புச் சேர்க்கை (Net Value Added) என்ற கணக்கில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி குறைவாகவே உள்ளது. (Economic & Political Weekly 18—11—89) தொழில் துறையில் உற்பத்தித்துறையை மட்டும் (Manufacturing Sector)



படிப்பகம்

www.padippakam.com

வைத்து இன்னும் நீண்ட காலத்திற்கு கணக்கிட்டுப் பார்க்கும் போது இன்னும் தெளிவாகத் தெரியும்.

| மாநிலம் | SDP in Manufacturing Sector சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் - 1970-71 முதல் 1984-85 முடிய |
|---|---|
| ஆந்திரப்பிரதேசம் | 5.33% |
| பீகார் | 5.51% |
| குஜராத் | 5.75% |
| கர்னாடகா | 5.76% |
| மத்தியப் பிரதேசம் | 6.19% |
| மகாராஷ்ட்டிரா | 5.00% |
| **தமிழ்நாடு** | **3.81%** |
| உத்திரப் பிரதேசம் | 6.52% |
| மேற்கு வங்கம் | 1.42% |

ஆதாரம்: Recent Trends in Industrialisation in Tamil Nadu—Nasir Tyabji and Padmini Swaminathan—Workshop on "Perspectives for Industrialisation in Tamil Nadu during 8th Plan—MIDS, dt: 23, 24—9—89)

ஒன்பது பெரிய மாநிலங்களை ஒப்பிட தமிழகத்தின் உற்பத்தித்துறை தொழிலின் வளர்ச்சி எவ்வளவு பின்தங்கி உள்ளது என்பது தெளிவாகும்.

தமிழகத் தொழில் வளர்ச்சி குன்றிப் போனதற்கு இங்கு தொழிலாளிகளின் உற்பத்தித்திறன் குறைந்து விட்டதாகவும், அதனால் தொழில் முனைவோர் இங்கு முதலீடு செய்ய விரும்ப வில்லை என்றும் ஒருவாதம் முன்வைக்கப்படுகிறது. உண்மையில், மகாராஷ்டிரா, குஜராத் இரண்டுக்கும் அடுத்தபடியாக தமிழ் நாட்டில் தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் அதிகம் (நசீர் தியாப்ஜி—பத்மினி சுவாமிநாதன் அறிக்கை.)

தமிழகத்தின் தொழில்வளர்ச்சி குன்றிப்போயுள்ளதற்கு கீழ்வரும் மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

1) மத்திய அரசின் முதலீடு குறைந்து வருவது

2) மின்சாரப் பற்றாக்குறை

3) அடிப்படைக் கட்டமைப்பு வளர்ச்சி இன்மை.

## 1. மத்திய அரசின் முதலீடு குறைந்து வருவது:

அடுத்த பக்கத்தில் வரும் வரைபடம் இதனை விளக்கும்.

அனைத்திந்திய சராசரியை ஒப்பிடும்போது தமிழ்நாடு கூடுதலான மூலதன உற்பத்தித் திறனையும் (Capital Productivity) குறைவான அளவில் ஒரு தொழிலாளிக்கான மூலதனத்தையும் (Capital per Worker) பெற்றுள்ளதை இந்த வரைபடம் காட்டும். உ.பி, பீகார், ம.பி போன்ற மாநிலங்கள் இதற்கு நேர்மாறாக உள்ளது விளங்கும்.

உற்பத்தியில் மூலதனம் எவ்வளவு திறமையோடு கையாளப் பட்டுள்ளது என்பதையும், உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியையும் மூலதன உற்பத்தித் திறன் பிரதிபலிக்கிறது. இது மத்திய அரசின் கொள்கையோடு நேரடி சம்பந்தமுள்ளதில்லை. மாறாக, அந்தந்த முதலாளிகள் மற்றும் நிர்வாகிகளின் ஆற்றலைப் பொருத்தது.

ஆனால், ஒரு தொழிலாளிக்கான மூலதனம் என்ற விகிதம், அத்தொழிலில் ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் அளவைப் பெரிதும் சார்ந்திருக்கிறது. இது மத்திய அரசின் தொழில் முதலீட்டு முடிவோடு நேரடி சம்பந்தமுடையது.


தொழிலாளர்களின் உற்பத்தித் திறனிலும் மூலதன உற்பத்தித் திறனிலும் முன்னணியில் நிற்கும் தமிழ்நாட்டை மத்திய அரசு திட்டமிட்டு புறக்கணித்து வருகிறது என்பதே இதிலிருந்து பெறப்படும் உண்மையாகும்.

நாடு முழுவதும் நிறுவப்பட்டு வரும் புதிய பெருந்தொழில் திட்டங்களில் தமிழ்நாட்டின் பங்கை, மற்ற பெரிய மாநிலங் களோடு ஒப்பிட்டு பார்ப்பதற்கு கீழ்வரும் அட்டவணை உதவும்.



படிப்பகம்

www.padippakam.com




(காண்க: ரவீந்திரா, H. தலோகியா
—Economic and Political Weekly — 18—11—89)

படிப்பகம்

www.padippakam.com

நிறுவப்படும் பெருந்தொழில் திட்டங்களில் மாநிலங்களின் பங்கு

| மாநிலம் | பெருந்தொழில் திட்டங்களில் பங்கு - சதவீதத்தில் |
|---|---|
| ஆ.பி | 14.2% |
| பீகார் | 6.9% |
| குஜராத் | 9.2% |
| கர்நாடகா | 6.3% |
| ம.பி | 7.3% |
| மகாராஷ்டிரா | 10.7% |
| **த.நா** | **3.3%** |
| உ.பி | 13.6% |
| மே.வ | 8.3% |

(காண்க: நசிர்தியாப்ஜி - பத்மினி சுவாமிநாதன் ஆய்வறிக்கை)

இன்று மட்டுமல்ல, வரும் உடனடி எதிர்காலத்திலும் தமிழகம் தொழில்வளர்ச்சி வேகம் பெறுவதற்கு வாய்ப்பே இல்லை என்பதையே இது காட்டுகிறது.

## 2. மின்சாரப் பற்றாக்குறை

தமிழ்நாட்டில் மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற முடியாமைக்கு ஒன்றிய அரசு காரணமாக இருக்கிறது என்பது ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. மின்பற்றாக்குறை இருப்பதால் தொழிற்சாலைகள் சொந்த மின் உற்பத்தி ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டியுள்ளது. இது உற்பத்திச் செலவைக் கூட்டுமென்பதால் பல முதலாளிகள் தமிழ்நாட்டில் முதலீடு செய்யத் தயங்குகின்றனர்.

## 3. அடிப்படைக் கட்டமைப்பு வளர்ச்சிக் குறைவு

சர்வதேசக் கடல் போக்குவரத்தை ஈர்க்கும் சேதுக் கால்வாய்த் திட்டம், தூத்துக்குடித் துறைமுக விரிவாக்கத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்த இந்திய அரசு விரும்பவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

திண்டுக்கல் - மதுரை - நெல்லை ரயில் பாதையை அகலப் பாதையாக மாற்றி, அதைக் கரூரில் ஈரோடு - திருச்சி அகலப் பாதையில் இணைக்கும் திட்டம் முழு அளவில் செயல்படுத்தப் படாமல், ஒரு கண்துடைப்பு முயற்சியாக கரூருக்கும், திண்டுக்கல்லுக்கும் இடையே துவக்கப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து மதுரை, கோவை வரை ரயில்போக்குவரத்தை மின் மயமாக்கும் திட்டமும் புறக்கணிக்கப் படுகிறது.

தமிழ்நாட்டின் மரக்காணத்திலிருந்து, ஆந்திரப் பிரதேசத்தின் பெத்தகஞ்சம் வரை நீர்வழி சரக்குப் போக்குவரத்திற்காக போடப்பட்ட பக்கிங்ஹாம் கால்வாய்த் திட்டம் இந்திய அரசால் புறக்கணிக்கப் படுகிறது.

காவிரி நீர் வரத்து பாதிக்கப்பட்டுள்ளதால் தொழிற்சாலை களுக்கான தண்ணீர் கிடைப்பதும் அரிதாகியுள்ளது.

தொழில்துறை குறித்த அதிகாரங்களும், பெருந்திட்டங் களுக்குத் தேவைப்படும் நிதி வருவாயும் ஒன்றிய அரசிடம் இருக்கும்வரை தமிழ்நாட்டில் சீரான விரைவான தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பில்லை.

என்வே,

**அனைத்துத் தொழில்களுக்கும் உரிமம் வழங்கும் அதிகாரமும், தேவைக்கேற்ப பெருந்தொழில்களை அரசுடைமை யாக்கும் அதிகாரமும் தமிழ்த் தேசியக் குடியரசிடமே இருக்க வேண்டும்.**

**சுரங்கம், தோட்டம், பெட்ரோலியம் மற்றும் கனிமங்கள் முதலான இயற்கைச் செல்வங்கள்—**

**மின்சாரம், துறைமுகம் போன்ற அடிப்படைக் கட்டமைப்புகள்.**

**முதலியவை தமிழ்த்தேசியக் குடியரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.**

**இந்தியாவில் இதர சகோதர தேசிய இனப் பகுதிகளோடும் மற்றும் வெளிநாடுகளுடனும் நேரடியாகத் தமிழகம் வணிக உறவு வைத்துக் கொள்ள உரிமை வேண்டும்.**



படிப்பகம்

www.padippakam.com

தொழில்துறை தொடர்பான தொழில் நுட்பங்களைப்பற்றி கருத்துப் பரிமாறிக் கொள்வதற்கு அனைத்திந்திய அளவில் அமைப்பு ஒன்று நிறுவலாம்.

**தீர்மானம்: 12**

## தொழிலாளர்துறை அதிகாரங்கள் அனைத்தும் தமிழகத்திற்கே

தொழிலாளர்துறை குறித்த அதிகாரங்கள் பொதுப் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளன. தொழிலாளர் நலன் கருதி மாநில சட்டப்பேரவை தானே சட்டமியற்றி செயல்படுத்த முடியாத நிலை இன்று இருக்கிறது.

இந்திய அரசின் கருத்துக்கு மாறுபட்ட முற்போக்கான சட்டங்களை கொண்டுவர முடியாத நிலை உள்ளது.

எனவே,

**தமிழகத்தில் தொழிலாளர் துறை குறித்த அனைத்து அதிகாரங்களும் தமிழ்த் தேசிய இனக் குடியரசிடமே இருக்க வேண்டும்.**

**தீர்மானம்: 13**

## கல்வி அதிகாரம் அனைத்தும் தமிழகத்திற்கே

கல்வி முதலில் மாநிலப் பட்டியலிலிருந்து 'நெருக்கடி நிலை' காலத்தில் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது அப்படியே நீடிக்கிறது.

உயர்கல்வி, மத்தியப்பள்ளி ஆகியவை துவக்கத்திலிருந்தே ஒன்றிய அரசின் வசம் இருக்கின்றன. பல்கலைக் கழகங்கள் இந்திய அரசின் பல்கலைக்கழக மானியக்குழு மூலம் கட்டுப் படுத்தப்படுகின்றன.

இப்போது புதிய கல்விக் கொள்கையும், 'நவோதயா' பள்ளியும் இந்திய அரசால் திணிக்கப்பட்டுள்ளன. தேசிய இன



படிப்பகம்

www.padippakam.com

நலன்களையும், விருப்பங்களையும் புறந்தள்ளி இந்திய அரசின் நோக்கங்களையும் தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் கல்வி பயன்படுத்தப்படுகிறது.

இந்தியைத் திணிப்பது. 'பாரதப் பண்பாட்டை'ப் பரப்புவது, இந்திய ஆளும் வர்க்கத் தேவையையொட்டி கல்விக்கு வரம்பு கட்டுவது ஆகியவற்றை இந்திய அரசு கல்வித்துறையில் செய்கிறது.

கல்விக்கு ஆகும் செலவில் பெரும் பகுதியை தமிழக அரசே ஏற்கிறது. இந்திய அரசு கொடுக்கும் கல்வி மானியம் குறைந்து கொண்டே வருகிறது. ஆனால், கல்வித்துறையில் இந்திய அரசின் ஆதிக்கம் உயர்ந்து கொண்டே பேரகிறது. கல்வித்துறையில் இது தேசிய இன ஒடுக்குமுறையே ஆகும்.

எனவே,

**உயர்கல்வி உள்ளிட்ட அனைத்துக் கல்விக்கான அதிகாரங்களும் தமிழ்த்தேசியக் குடியரசிடம் இருக்க வேண்டும். கல்வியில் தலையிடும் அதிகாரம் எதுவும் இந்திய அரசிற்கு இருக்கக் கூடாது.**

**அனைத்திந்திய அளவில் கல்வி நிபுணர்கள் கருத்து பரிமாறிக் கொள்வதற்குரிய அமைப்பு இருக்கலாம்.**

**தீர்மானம்: 14**

## பண்பாட்டு ஒடுக்குமுறை நீக்கப்படவேண்டும்

"இந்தியச் கூட்டுக்கலச்சாரம்," 'இந்தியப் பாரம்பரிய பண்பாடு' என்ற பெயர்களில் இந்தியா முழுமைக்கும் வேத காலப் பண்பாட்டை அடித்தளமாகும் முயற்சில் முழுவீச்சில் இந்திய ஆளும் வர்க்கம் ஈடுபட்டுள்ளது.

"பாரத தேசியம்' என்ற ஒன்றைப் புனைவதற்காக ஒரே மாதிரியாக பாரதப் பண்பாடு என்ற பெயரில் வேதகாலப் பண்பாட்டை உயர்த்திப் பிடிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

சாராம்சத்தில் பிராமணீயத் தன்மை வாய்ந்த கர்நாடக இசை, பரத நாட்டியம் ஆகியவற்றிற்கே கலைத்துறையில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. 'தேசிய' இனங்களின் பாரம்பரியமான இசை, நாட்டியம் ஆகியவை வட்டார விஷயங்கள் என்ற அளவில் ஒதுக்கப்படுகின்றன. 'மஹாபாரதம்' முதல் 'இராமாயணம்', 'மகாபாரதம்' வரை தொலைகாட்சி பிராமணீயப் பண்பாட்டு ஆதிக்கக் களமாக செயல்படுகிறது.

இந்தியக் கலாச்சாரம் என்ற பெயரில் வெளிநாடுகளிலும் சாரத்தில் இந்துக் கலாச்சாரமே அரசால் பரப்பப்படுகிறது. அமைச்சர்கள் கலந்து கொள்ளும் துவக்க விழாக்களில் குத்து விளக்கு ஏற்றுவது, தேங்காய் உடைப்பது, தீபாராதனை காட்டுவது, ஏவுகணைகளுக்கு 'அக்னி' 'திரிசூலம்' என்று பெயர் சூட்டுவது போன்றவைது மூலமும் இந்தப் பண்பாட்டு ஒடுக்கு முறை நடக்கிறது.

மறுபக்கம் மேற்கத்திய ஏகாதிபத்தியப் பண்பாட்டை தாராளமாக பரப்புகின்றனர். பாலியல் வக்கிரங்கள். தனிநபர் வன்முறைகள், சமூகத்தில் கூட்டுப் பொறுப்பை நிராகரிக்கும் தனிநபர் துய்ப்புவாதம் போன்ற மேற்கத்தியப் பண்பாட்டுச் சீர்கேடுகள் தகவல் - தொடர்பு சாதனங்கள் மூலம் பரப்பப்பட்டு கின்றன.

சர்வதேச போதை மருந்து கொள்ளைக்காரர்களுடன் உயர்மட்ட அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், கூட்டு வைத்துக் கொண்டே, போதைப் பொருள் பண்பாட்டை எதிர்ப்பதாக பாசாங்கு செய்கிறார்கள்.

தமிழிசை, பாரம்பரிய கூத்து ஆகியவை புறக்கணிக்கப் படுகின்றன. பாட நூல்களில் தமிழக வரலாற்றுக்கு உரிய முக்கியத்துவம் தராமல் வட இந்திய வரலாற்றுக்கு மிகை முக்கியத்துவம் தருவது போன்ற பாரபட்சப் போக்குகள் நீடிக்கின்றன.

எனவே,



படிப்பகம்

www.padippakam.com

பாரத தேசியப் பண்பாடு என்ற ஒன்றை புனைவதைக் கைவிட்டு அந்தந்த தேசியப் பண்பாடுகள் முழுவீச்சில் வளர வாய்ப்பளிக்க வேண்டும்.

தீர்மானம்: 15

## தகவல்—தொடர்பு சாதனங்கள் அனைத்தும் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்

தகவல்-தொடர்பு சாதனங்களான செய்தித் தாள்கள் இதழ்கள், திரைப்படம், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றுக்கான அதிகாரங்கள் அனைத்தும் இந்திய அரசின் ஏகபோகமாக இருக்கின்றன. பத்திரிகைகள், திரைப்படங்கள் ஆகியவற்றுக்கான உரிமம் வழங்கும் அதிகாரம் ஒன்றிய அரசிடமே இருக்கிறது. வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் நடத்தும் அதிகாரம் டெல்லியிடமே இருக்கிறது. பத்திரிக்கை விளம்பரங்கள் மற்றும் திரைப்படங்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வரிகளில் பெரும் பகுதியை இந்திய அரசே கொண்டு செல்கிறது.

தொலைக் காட்சியில் ஒரு நாளின் ஒளிபரப்பு நேரமான சுமார் 7 மணியில் சுமார் 3½ மணிநேரம் தமிழ்மொழி நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. எஞ்சிய 3½ மணிநேரத்தில் பெரும்பகுதி இந்தி நிகழ்ச்சிகளுக்கும், அதையடுத்து ஆங்கில நிகழ்ச்சிகளுக்கும் ஒதுக்கப்படுகின்றது.

டெல்லித் தொலைக்காட்சியில் இந்தி மொழி திரைப்படம் காட்டும்போது மட்டும் ஆங்கிலத்தில் உரையாடல் போடுவ தில்லை. தமிழ் உள்ளிட்ட இதர தேசிய மொழிப் படங்கள் காட்டும்போது ஆங்கில உரையாடல் போடப்படுகிறது. இந்தி தெரிந்திருப்பதைக் கட்டாயமாக்கும் முயற்சிகளில் இதுவும் ஒன்று'

வானொலி, தொலைக்காட்சிக்கு 'தன்னாட்சி' வழங்குவது இவ்வொடுக்குமுறையை நீக்கும் வழி ஆகாது.



படிப்பகம்

www.padippakam.com

எனவே,

வானொலி, தொலைக்காட்சி நிலையங்களை தமிழ்த் தேசியக் குடியரசு சொந்தமாக நடத்த அதிகாரம் வேண்டும்.

செய்தித்தாள் பதிவு, திரைப்படத் தணிக்கை ஆகியவை தமிழக அரசின் கைகளில் இருக்க வேண்டும்.

ooo



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் வெளியீடுகள்

1. இந்தியாவில் தேசிய இனங்கள்
   பெ. மணியரசன் – ரூ. 8.00
2. வர்ண சாதி ஒடுக்கு முறையில் மண்டல் குழு வைத்த நெருப்பு – ரூ. 10.00
3. கொள்கை அறிக்கை – ரூ. 2.00
4. கண்ணோட்டம் மாத இதழ் – ரூ. 3.00

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

தொடர்பு கொள்ள
தலைமையகம்,
25/5, லால்கான் தெரு,
சிதம்பரம் – 608 001.

கௌதம் ஆப்செட் பிரிண்டர்ஸ், 73 கீழ வீதி, சிதம்பரம். போன் 2350

படிப்பகம்